ISSN 1888-1246

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி: 05 | பெப்ரவரி 2009 | பார்வை: 54 | விலை: ரூபா 50.00



- மாணவரின் ஒழுக்க வளர்ச்சியில் ஆசிரியர் பங்கு
- ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் அணுகு முறைகளும்
- தொழில்சார் ஆற்றுப்படுத்தல் - கல்வியியல் நிலைப்பட்ட புலக்காட்சி
- கற்கும் மாணவர் கவனத்திற்கு
- ஆசிரியர் சேவைக்கான மாற்றங்களின் தேவைகள்

- 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சை: உணர்த்தும் கோலங்கள்
- நேர்காணல்: மேரி கமலா

- ஆர்.லோகேஸ்வரன்
- ச.நவேந்திரன்
- சபா.ஜெயராசா
- ப.இராஜேஸ்வரன்
- ந.பார்த்திபன்
- பொன்.தெய்வேந்திரன்
- கு.கமலகுமார்
- த.கலாமணி
- துரைமடன்
- அமிர்தஸன்

வெளிவந்துவிட்டது

கூடம் - 10



விலை: 100.00

தொடர்பு:
3, டொரிங்டன் அவனியூ
கொழும்பு 07
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: *koodam@viluthu.org*

K.BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Kalaiaham, Alvai

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

ஆலோசகர் குழு : பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா.ஜெயராசா
(முன்னாள் பேராசிரியர் கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் மா.செல்வராஜா
(கல்வித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி உ.நவரட்ணம்
(பணிப்பாளர், சமூகக்கற்கை, தேசிய கல்வி நிறுவகம்)
தை. தனராஜ்
(முதுநிலை விரிவுரையாளர், கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இதழ் வடிவமைப்பு : செல்வி. த.மைதிலி

அச்சு : சேமமடு பதிப்பகம்
தொலைபேசி: 011-2472362

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:

: AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel 011-2506272
E-mail ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

ISSN 1888 - 1246

அகவிழி

மாத இதழ்

உள்ளே...

❐ மாணவரின் ஒழுக்க வளர்ச்சியில்... 03

❐ ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் அணுகு... 07

❐ தொழில்சார் ஆற்றுப்படுத்தல் - கல்வியியல்.. 12

❐ அபிவிருத்திக்கான ஊடக வழிக்கல்வி... 15

❐ கற்கும் மாணவர் கவனத்திற்கு...! 21

❐ ஆசிரியர் சேவைக்கான மாற்றங்களின்... 23

❐ கல்விச் சீர்மியமும் பன்முக நுண்மதியும் 26

❐ 5ம் தரப் புலமைப் பரீட்சை உணர்த்தும்... 31

❐ நேர்காணல் : மேரி கமலா 34

❐ வாசகர் பக்கம் 38

அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு. கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

ஆசிரியரிடமிருந்து...

இந்த இதழ் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது வன்னிப் பகுதியில் இருந்து வரும் செய்திகள் கவலையளிக்கின்றன. தொடர்ந்து குண்டு வீச்சுகளும் செல்லடிகளும் இடம் பெறுகின்றன. இதனால் பிணக்குவியல்களும் மற்றும் மக்களின் இடப் பெயர்வும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

கடந்த சில மாதங்களாக கல்விச் செயற்பாடுகள் முழுமையாக இல்லாமல் உள்ளன. 'உயிரைப் பாதுகாப்பது'என்பதே பெரும் பிரச்சினையாக மாறியுள்ளன. பாடசாலைகள் அகதிகளைத் தாங்குவதும் அவர்களை பாதுகாப்பதும் என்ற கடமையைக் கூட செயற்படுத்த முடியாதளவிற்கு நிலைமைகள் சிக்கலாகவும் நெருக்கடி மிகுந்ததாகவும் மாறியுள்ளன. இந்த மக்களுக்கான எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

இந்த 'எதார்த்தம்' 'போரும் வாழ்வும்' தமிழ் பேசும் மக்களுக்கு புதிதல்ல. ஆனால் இதுவே தொடர் கதையாவது பெரும் வேதனைக்குரியது. குறிப்பாக இளம் சிறார்களது மனநிலை இந்த நெருக்கடிகளால் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகும் என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

கடந்த காலங்களில் இருந்து 'கல்வியின் தரவீழ்ச்சி' பற்றி பல்வேறு கருத்துக்கள் விமரிசனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் கல்வித் தரவீழ்ச்சி மேலெழுச்சி பெற்று வருகிறது. கல்வி நடவடிக்கைகளில் இருந்து பெரும்பாலான சிறார்கள் இடைவிலகிச் செல்லும் ஆபத்து வலுப்பெற்று விட்டது. எழுத்தறிவற்ற குழாம் உருவாகிவிட்டது.

கல்வி என்பது பாடசாலை சார்ந்த விடயம் மட்டுமல்ல. மாறாக சுற்றாடலில் பெறும் அனுபவங்களினூடாகவும் கையளிக்கப்படுவதாகவே உள்ளது. ஆகவே தமிழ் பிரதேசங்களின் சுற்றாடல் சார் அனுபவம், அறிவு எத்தகு கல்வியை எமது மாணவர்களுக்கு வழங்கும் என்பது தெளிவானது. ஆனால் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் தாக்கங்கள் பன்முகப்பட்டவை. இவை மனித வள அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன.

இதுவரையிலான 'பன்னாட்டு போரும் வாழ்வும்' 'பன்னாட்டு அனுபவங்கள்' யாவும் பல்வேறு பாடங்களை நமக்கு கற்றுக் கொடுத்துள்ளன. இந்த மரபு வழிவந்த சிந்தனைகள் மானிட வாழ்வு, எதிர்காலம் பற்றிய நேர்நிலைத் தரிசனக் கோலங்களை நமக்கு கையளித்துள்ளன. எந்தவொரு நாகரிகச் சமூகமும் இவற்றை உணர்ந்து கொள்ளத்தான் வேண்டும்.

உதாரணமாக இன்று இலங்கையில் 'முன்பள்ளிக் கல்வி' முக்கியத்துவம் பெற்று வருகிறது. வரலாற்று ரீதியில் முன் பள்ளிக் கல்வி என்னும் எண்ணக்கரு விருத்தியுற்ற பின்புலத்தை நோக்கும் பொழுது "போர்ச்சூழல்" முக்கியமான பங்கு வகித்துள்ளதை இனங்காணலாம்.

குறிப்பாக மேலை நாடுகளில் போர்க்களத்தில் எண்ணற்ற வீரர்கள் கொல்லப்பட்டனர். அப்போது அவர்களது மனைவிமார்களும் குழந்தைகளும் இக்காட்டான நிலைக்குத் தள்ளப்பட்டனர். அத்தருணத்தில் இங்கிலாந்து நாட்டு அரசு அனாதையாக்கப்பட்ட இவர்களுக்கு ஏதேனும் செய்திட வேண்டும் என்று எண்ணியது. இதனால் அனாதையாக்கப்பட்ட குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பினை ஆதரவற்ற கணவனை இழந்த பெண்கள் கையில் ஒப்படைத்தது. இதன் காரணமாக குழந்தைகளுக்கு ஒரு நிறுவனம் ஏற்படத் தொடங்குகிறது.

மேலும் இக்காலத்தில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல், உளவியல் காரணங்கள் ஒன்றொடொன்று மிக நெருக்கமாகப் பின்னிப்பிணைந்து செல்லத் தொடங்கின. இவற்றின் விளைவாகவும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் கல்வியூட்டல் போன்ற பண்புகள் முதன்மை பெறத் தொடங்கின. இதனால் "முன்பள்ளிக் கல்வி முறைமை" விருத்தி பெறத் தொடங்கின. இவ்வாறு ஆய்வுகள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

ஆகவே எமது வாழ்புலத்திலும் முன்பள்ளிக் கல்வி முறைமை பற்றிய மீள் சிந்தனை வேண்டும். சமூக நெருக்கடிகளால் உளப் பாதிப்புக்கு உள்ளான சிறாரை மீட்டு பொருத்தமான ஆதரவும் உற்சாகமும் மற்றும் சீர்மியமும் வழங்கக் கூடிய கல்விச் சூழலை நாம் கொடுக்க வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான புத்தாக்கமான பயிற்சியும் திட்டமும் எமக்கு வேண்டும். இதைவிட மாற்று அணுகு முறைகள் குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இது எமது காலத்தின் கட்டாயமும் கூட.

தெ. மதுசூதனன்



ஆர். லோகேஸ்வரன்,
ஆசிரிய கல்வியியலாளர்,
ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி.

ஒழுக்கவியல்

கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணவர்களிடம் நல்லொழுக்கப் பண்புகளை வளர்த்துச் சமுதாயத்தில் பண்புள்ளவர்களாக வாழ அவர்களை பயிற்றுவிப்பதாகும்.

மாணவரின் ஒழுக்க வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு

கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணவர்களிடம் நல்லொழுக்கப் பண்புகளை வளர்த்துச் சமுதாயத்தில் பண்புள்ளவர்களாக வாழ அவர்களை பயிற்றுவிப்பதாகும். இதனையே கல்விச் சிந்தனையாளர்களான ஹெர்பார்ட், எலிஸாப்த் ஹர்லொக், கோல்பர்க் போன்றோரும் வலியுறுத்துகின்றனர். இன்று கல்வியின் நோக்கங்கள் பல இருப்பினும் தற்காலச் சூழலில் "நல்லொழுக்கத்துடன் வாழகூடிய நல்ல வலுமிக்க மனவுறுதியை" (Strong will) மாணவர்களிடம் உருவாக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் ஒழுக்கம் என்பது தனிப்பட்டோரின் வாழ்க்கைக்கும், சமுதாயத்தின் நலனுக்கும் உதவுவதாக அமைவதாலாகும்.

இதில் குடும்பத்தின் செல்வாக்கு, குடும்ப உறுப்பினர்களின் நடத்தைகள் மாணவரின் ஆரம்பகால ஒழுக்க வளர்ச்சியில் ஓரளவு செல்வாக்கு செலுத்தினும், அடுத்த கட்டமாகிய பாடசாலை மாணவர் ஒழுக்கப் பண்புகள் பெறச் செய்வதில் கூடிய பங்கினை வகிக்கின்றது. பாடசாலையிலேயே மாணவர் வாழ்க்கைக்கான அறக் கருத்துக்களையும், உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள்களையும் தனது உள்ளத்தே அமைத்து அவற்றுக்கேற்ப வாழகூடிய பழக்கத்தைப் பெறுகின்றனர். பாடசாலைக் கல்வி வழியாகவே இத்தகைய நல்லொழுக்க பழக்கங்களை மாணவர் அடைய வேண்டும் என்றும், மாணவரின் குறைபாடுடைய சூழ்நிலையை மாற்றியமைத்து அவர்களின் சூழ்நிலையை சீராக்க உதவவும் வழியேற்படுத்த வேண்டும் என்றும் சமூகம் எதிர்பார்க்கின்றது. எனவே மாணவரின் ஒழுக்க வளர்ச்சியில் பாடசாலையின் பங்கு அளப்பரியதாகும்.

பாடசாலைகளில் 'ஒழுக்கம்' என்பது ஆரம்ப காலந்தொட்டே வலியுறுத்தப்பட்டு வந்துள்ளதை நாம் காணலாம். ஆனால் அவ் ஒழுக்கமானது வகுப்பறையில் மாணவர் செயலற்ற நிலையில் சத்தமின்றி அமைதியுடன் இருக்க வேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது. அதாவது "ஆசிரியர் சொல்லுக்கு மாணவர் உடனடியாக கீழ்படிதலே ஒழுக்கம்" எனப்பட்டது. இது வசைப்பாடல், கட்டாயப்படுத்தல், தண்டனையளித்தல், பிரம்பு கொண்டு மாணவரை நையப்புடைத்தல் என புறக்கட்டுப்பாடுகளால் ஏற்படுத்தப்பட்டது. வகுப்பறையில் ஒழுக்கமின்மை காணப்படின் அது

மாணவரின் தவறாகவே கருதப்பட்டது. எனவே அக்காலத்தில் ஒழுக்கம் என்பது விஷேடமாக மாணவரை தவறுகள் செய்யாமல் தடைசெய்வதையே (எதிர்மறை கட்டுப்பாடு - Negative Control) நோக்கமாக கொண்டிருந்தது. ஆனால் தற்காலத்தில் ஒழுக்கம் என்பது நல்பழக்க வழக்கம், நன்மனப்பான்மை போன்றவற்றை பெற்று சிறப்பான ஆளுமை வளர்ச்சியினை மாணவர் பெற உதவுவதாக அமைய வேண்டும். மேலும், இது தண்டனையால் அன்றி மாணவரின் மனதில் இருந்து எழ வேண்டும் என்றும், இது வகுப்பறையில் ஆசிரியரின் மேற்பார்வையால் மட்டுமன்றி சமூக நிலையில் இருந்தும் (வகுப்பறைக்கு வெளியில், சமூகத்தில்) எழ வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தற்காலத்தில் எதிர்மறை கட்டுப்பாடுகளின்றி ஒழுக்கப் பண்புகளை மாணவர் தாமே விரும்பி ஏற்க வேண்டும் என்பதே நோக்கமாகும். இவ்வாறான ஒழுக்க நிலையை அடைந்தோர் தம்மை பொறுத்தவரை மட்டுமன்றிச் சமூகத்தை பொறுத்த அளவிலும் நல்ல பொருத்தப்பாட்டை பெற்றவர்களாக வாழ்வர் எனக் கூறப்படுகிறது. ஆகவே தற்காலத்தில் ஒழுக்கம் என்பது "தவறான நடத்தையில் இருந்து விடுவித்தல் அன்று; மாறாக சுயகட்டுப்பாடு (Self Control), சுயமுயற்சி ஆகியவற்றுடன் துணிந்து நற்செயல்களைச் செய்ய பிள்ளைகளை ஊக்குவிப்பதாகும்" என வரையறை செய்யப்படுகிறது.

அடுத்து இவ் ஒழுக்கப் பண்பானது எவ்வாறு மாணவரிடம் விருத்தியடைகின்றது என்று நோக்குவோமாயின் எந்த ஒரு குழந்தையும் பிறக்கும் போது ஒழுக்கப் பண்புகளை பெற்றிருப்பதில்லை. ஆயினும் குடும்ப சூழல், தான் வாழும் சூழல், கற்றல், பயிற்சி, பிறரது எடுத்துக்காட்டுக்கள் போன்றவற்றின் அடிப்படையிலேயே குழந்தைகளிடம் ஒழுக்க பண்புகள் விருத்தியடைகின்றது. நல்ல சூழலில் வாழும் பிள்ளைகள் நல்ல ஒழுக்கப் பண்புகளை கொண்டவர்களாகவும், பொருத்தமற்ற சூழலில் வாழும் பிள்ளைகள் பிழையான, குறைபாடுடைய ஒழுக்கப் பண்புகளை கொண்டவர்களாகவும் வளர்கின்றனர். இங்கு ஒழுக்க பண்புகளின் விருத்தி என்னும் போது அது பிள்ளைகள் ஒழுக்கப் பண்புகளை பெறுதல் அதில் வலுவான விருப்பத்தை/பற்றுக்களை உருவாக்கிக் கொள்ளல் - அதனை தன்கருத்துடன் இணைத்தல் - அவற்றுக்கேற்ப நடத்தல் என தொடர் செயலாக இடம் பெறுவதைக் காணலாம். இதில் ஒழுக்க வளர்ச்சி (பண்புகள்) ஒருவரிடம் எவ்வாறு விருத்தியடைகிறது என்பது பற்றி பல உளவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் அதனை ஒழுக்க வளர்ச்சி படிகளாகவும் வேறுபடுத்தி காட்டியுள்ளனர். அவை:

படி - I - பட்டறிநிலை

இது ஆரம்ப நிலையாகும். இந்நிலையில் மகிழ்ச்சி, துன்பம் என்பன குழந்தையின் நடத்தையில் செல்வாக்கு பெற்றுக் காணப்படும். (மகிழ்ச்சியான செயலில் ஈடுபடல்/துன்பம் தரும் செயல்களை தவிர்த்தல்)

படி - II - ஆதிக்கநிலை

இந்நிலையில் தன்மீது ஆதிக்கம் செலுத்துவோரின் கட்டளைகளை ஏற்கும் தன்மை பிள்ளைகளிடம் காணப்படும். (பெற்றோர்/ஆசிரியர்)

படி - I - சமூக நிலை

இந் நிலையில் சமூகத்தின் பழக்கவழக்கங்கள், சமூக நியதிகள், சமூகத்தில் பரவலாகப் பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க நெறிக்கு ஏற்ப பிள்ளை நடக்கும் நிலை காணப்படும்.

படி - I - குறிக்கோள் நிலை

இது இறுதியான நிலையாகும். இந்நிலையில் ஒருவர் உறுதியாகப் பற்றி நிற்கும் மரபுகளும், இலட்சியங்களும், அறப் பண்புகளும் ஒழுக்க நடத்தையை நிர்ணயிக்கும் நிலையாக காணப்படும்.

ஒழுக்க வளர்ச்சி படிகள்

(Moral Development)



இவ்வாறாக ஒழுக்க வளர்ச்சி படிகளாக ஒரு பொதுவான கண்ணோட்டத்தில் உளவியலாளர்கள் வேறுபடுத்தி பார்த்தாலும் ஒழுக்க வளர்ச்சி நிலையை ஜான் பியாஜே 3 வகையாக வேறுபடுத்திக் காட்டுகின்றார். பியாஜேயின் கருத்துப்படி ஒழுக்கமானது அறிகை விருத்தியுடனேயே வளர்ச்சியடைகின்றது என்பதை பல எடுத்துக்காட்டுகள் மூலம் முன்வைத்துள்ளார். இவ் வளர்ச்சி படிநிலையினை கோல்பர்க் என்பவர் மேலும் விரிவாக பகுத்து 6 கட்டங்களாக வேறுபடுத்தியிருப்பதையும் காணலாம்.

மேற்படி ஒழுக்க வளர்ச்சியானது பல்வேறு படிநிலைகளாக வளர்ச்சியடைவதாக நிரூபிக்கப்பட்டபோதும் பிள்ளைகளின் வாழ்க்கையில் (ஒழுக்கவளர்ச்சியில்) அவ்வப்போது பல்வேறு தடைகளும் குறிக்கிடுவதை நாம் காணலாம். இதனையே கௌதம புத்தர் "மனித உள்ளம் இயல்பிலேயே தூய்மையானது எனவும் அது புறக்காரணிகளாலேயே மாசுப்படுகின்றது" என்றும் குறிப்பிடுகின்றார். ஆகவே பிறக்கின்றபோது உள்ளத்தூய்மையுடனேயே பிள்ளை பிறக்கின்றது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையே. ஆயினும் அது வளர்ந்துவரும் காலத்தில் பல காரணிகள் அதன் வளர்ச்சிக்கு தடையாக அமைகின்றது. அக்காரணிகளாவன:

1. குடும்பம்

குடும்பத்தில் அன்பு, பரிவு இல்லாதநிலை, ஒற்றுமை சிதைவு தவறான நடத்தைகள், முதியோர்களது பொருத்தமற்ற செயல்கள் என்பனவும்,

2. பாடசாலை

பாடசாலையில் காப்புணர்ச்சியின்மை, தன்னம்பிக்கையற்ற நிலை, பிழையான முன்மாதிரிகள், ஆசிரியரின் தீமை பயக்கும் செல்வாக்கு, பரீட்சை முறைகள் என்பனவும்.

3. சமூகம்

சமூகத்தில் காணப்படும் காப்புணர்ச்சியின்மை, சமூக எதிர்ப்பு நடத்தை கொண்ட தோழர்களின் நட்பு, சமயப் பற்றின்மை என்பனவும்.

4. தொடர்பு சாதனங்கள்

தரக்கறைவான திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மஞ்சள் பத்திரிகைகள், பாலியல் ரீதியான பிழையான நடத்தைகளை தூண்டும் இணையத்தளங்கள் என்பனவும் ஆகும்.

ஆயினும் மேற்குறிப்பிட்ட ஒழுக்க வளர்ச்சிக்கான தடைகளை போக்க வேண்டியது குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள் என்பவற்றின் கூட்டான பொறுப்பாகும். ஆனால் தற்போது பாடசாலையை தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் இப்பொறுப்பினை நிறைவேற்ற தவறிச்செல்கின்ற போக்கினையே காண முடிகின்றது. முழு பொறுப்பினையும் பாடசாலை நிறைவேற்ற வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இதில் பாடசாலை என்னும் போது பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களின் பங்கு மிக அதிகமாகும். இங்கு விஷேடமாக பாடசாலையில் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கு ஆசிரியர் ஆற்றவேண்டிய பணிகளே சிறப்பாக ஆராயப்படுகிறது. அவ்வகையில் பாடசாலையில் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கு ஆசிரியர் ஆற்ற வேண்டிய பணிகளாவன:

1. வகுப்பில் அமைதியையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவதுடன் மாணவரது (நல்ல) நடத்தைக்கான தரத்தை சிறிது சிறிதாக உயர்த்தச் செய்தல்.
2. ஆசிரியர் மாணவர்கள் மீதான தனது கட்டுப்பாட்டை நிலையானதாகவும், அதே சமயத்தில் மிகவும் தீவிரமானதாக இல்லாத வகையிலும் செயற்படுதல். இதில் மாணவர்களை வகுப்பறையிலும், வெளியிலும் கட்டுப்பாட்டோடு நடத்தப்படுவதுடன் அவர்களுக்கு தேவைப்படும் சந்தப்பத்தில் உதவுபவராகவும் செயற்படுதல்.
3. மாணவர்களிடம் சில பொறுப்புகளை ஒப்படைத்து (கரும்பலகையை துடைத்தல், வகுப்பறையை துப்பரவு செய்தல், ஆசிரியர் இல்லாத போது வகுப்பறையை கண்காணித்தல் போன்ற சந்தர்ப்பங்களில்) திட்டமிட்டபடி நடக்கச் செய்வதன் மூலம் மாணவர்களிடம் சுயக்கட்டுப்பாட்டுடன் செயற்பட/ஒழுக செய்தல்.
4. வகுப்பறையில் பாடத்தை கற்பிக்கும் போது ஒழுக்கத்தை கடைப்பிடிக்க செய்தல். (இதற்கு மாணவர்களை கவரும் வகையில் கற்பித்தலை ஒழுங்குபடுத்தி அதனூடாக, அமைதி, ஒழுக்கம் என்பவற்றை வகுப்பறையில் நிலை நாட்டுதல்)
5. மாணவர்கள் சில நல்ல ஒழுக்க நடத்தைகள் வகுப்பறையில்/பாடசாலையில் வெளிக்காட்டப்படும் போது அவற்றை பாராட்டுவதுடன், பொருத்தமற்ற (ஒழுங்கீனமான) நடத்தைகளை வெளிக்காட்டும் போது கண்டிப்பதன் வழியேயும் ஒழுக்க பயிற்சியினை (Hidden Curriculum) மறைமுகமாகப் நடைமுறைப்படுத்தல்.
6. மாணவர்களிடம் அறப்பற்றுக்கள் வளர ஆசிரியர் நேர்முகமாக வழிகோலுதல் வேண்டும். இதற்கு நற்பண்புகளுடைய பெரியோரின் வரலாற்றுக்களை வாசித்து அதன்படி ஒழுகுவதுடன் பிள்ளைகளுக்கும் அதுபற்றி எடுத்துக்கூறி அதன்படி நடக்க வழிப்படுத்தல்.
7. வகுப்பறையில் ஆசிரியர் இருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது பாடசாலை வாழ்க்கையில் மட்டும் நல்ல ஒழுக்க பண்புகளை பின்பற்ற செய்வது மட்டுமன்றி வாழ்க்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவை பொருந்தும் என எண்ணும்படி செய்தல்.

8. உண்மை பேசுதல், ஏனையவர்களுடன் அன்பாக பழகுதல், முதியோர்களை மதித்தல், ஆசிரியர்களை மதித்தல், சமூக நெறிமுறைகளை கடைப்பிடித்தல், கண்ணியமாக நடந்து கொள்ளல், தமது கடமைகளை நிறைவேற்றுதல் போன்றவை சில நிலைமைகளிற் மட்டுமல்ல வாழ்க்கை முழுவதும், எப்போதும் மேற்கொள்ள வேண்டிய பண்புகள் என்பதை உணர செய்தல்.

9. ஒழுக்க வளர்ச்சிக்கு சமய/அறநெறி போதனை (Religious or Moral Instruction) ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இது மனிதனுக்கு வாழ்க்கை நெறி, ஒழுக்கம், பண்பு, பண்பாடு அனைத்தையும் அளிப்பதோடு அமைதியையும் கொடுக்கிறது. எனவே சமய போதனை, சமயகல்வி, சமய நடைமுறை என்பனவற்றுக்கு ஆசிரியர் பாடசாலையில் முக்கிய இடம் கொடுத்தல்.

10. மாணவர்கள் தமது நடத்தைகளின் போது பிழை செய்து அதற்கு பிராயச்சித்தம் தேடுவதைவிட பிழையை செய்யாதிருக்க அவர்களை ஊக்குவித்தல்.

11. மாணவர்களுக்கு தமது வாழ்க்கையில் செய்யத்தகுந்தவை, செய்யத்தகாதவை தொடர்பான விளக்கம் கிடைக்க சகல சந்தர்ப்பங்களிலும் முன் வைத்தல்.

12. பார்த்து செய்தல் (Imitation) என்பது மாணவர்களின் கற்றலில் பெரும் பங்கு வகிக்கிறது. ஆதலால் ஆசிரியர் ஒழுக்க பண்புகளை தாம் முறையாக பற்றுவதுடன் அப்பண்புகளை ஒரு குறிக்கோளாக பிள்ளைகள் ஏற்கும்படி செய்தல். (ஆசிரியர் தான் எப்போதும் ஒரு முன்மாதிரியாக செயற்படுதல் வேண்டும்)

முடிவுரை

நல்லொழுக்கத்துடன் வாழக்கூடிய நல்ல வலுமிக்க மன உறுதியை (Strong will) மாணவர்களிடையே உருவாக்க வேண்டியது ஆசிரியரின் பணிகளுள் ஒன்றாகும். இதற்கு பாடசாலையில் கற்றல்-கற்பித்தல் சந்தர்ப்பத்திலும், ஏனைய சந்தர்பங்களிலும் மாணவர்களிடம் நல்லொழுக்க பண்புகள் உருவாக்கும் வகையில் ஆசிரியர் பணியாற்ற வேண்டும். அப்பணி எதிர்காலத்தில் மாணவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கும் உதவுவதாக அமைதல் வேண்டும். இதற்கு ஆசிரியர் தான் நல்லொழுக்க பண்புகளை முறையாக பின்பற்றுபவராக செயல்படுவதுடன், எப்போதும் மாணவர்களுக்கு (தான்) ஒரு முன்மாதிரியாக/எடுத்துக்காட்டாக செயல்பட வேண்டியதும் மிக அவசியமாகும்.

இணைப் பாடவிதானமும் சமயமும் விழுமியங்களும்

மாணவர்களின் பலதரப்பட்ட ஆளுமையையும் அதனூடாக தலைமைத்துவப் பண்புகளையும் விருத்தியாக்களில் பெருமளவு பங்கைப் பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகள் வழங்குகின்றன. இவை மாணவர்களது கூட்டுணர்வுக்கு செம்மை சேர்ப்பவையாகவும் உள்ளன. விளையாட்டு வெற்றி தோல்விகளை ஏற்று தலைமைத்துவ ஆளுமைப் பண்புகளைப் பல பரிமாணங்களில் விருத்தியாக்குகின்றது. அத்துடன் உடல் ஆரோக்கியத்தையும் வழங்குகின்றது. மேலும் சாரணீயம், முதலாளி, சமூகத் தொண்டுகள், இலக்கிய, நுண்கலை, விஞ்ஞான, மொழியியல் மன்றங்கள், நூல் வெளியீடுகள், விழாக்கள் மாணவர்களிடம் பலதிறன் விருத்திகளை ஏற்படுத்துகின்றன.

புதிய கல்விச் சீர்திருத்ததில் சமயபாடம் விழுமிய ரீதியான தலைமைத்துவ ஆற்றலைப் பெற வைக்கிறது. மானிட வாழ்க்கையின் உயர் மதிப்புக்களாக உள்ள வாய்மை அல்லது உண்மைப் பற்று (Truth) நேர்மையான நடத்தை (Righteous Conduct), அமைதி நாட்டம் (Peace), பிறரிடம் அன்பு காட்டல் (Love) என்பவை தனிப்பட்டவரது வாழ்க்கையில் மனநிறைவையும் நடைமுறையில் சமய பாடத்தில் சிறந்த A பெறுபேறு எடுக்கும் மாணவனுக்கு கோயிலில் தேவாரம் பாடத்தில் சிறந்த A பெறுபேறு எடுக்கும் மாணவனுக்கு கோயிலில் தேவாரம் பாடத் தெரியாத சூழ்நிலை பெரும்பாலும் காணப்படுகின்றது. எவ்வாறு A பெறுபேறு எழுத்தா எனின் தேவாரத்தை மறைத்து வைத்துப் பார்த்து எழுதியதால் ஆகும். இந்நிலையில் சமய பாடத்தின் நோக்கே சிதைந்த நிலை காணப்படுகிறது. இவற்றில் பாடசாலைகள் கூடுதல் அக்கறை எடுத்தல் வேண்டும்.

-சபா ஜெயராசா-



ச.நவேந்திரன் (ஆசிரியர்)
மட்/மாங்கேணி றோ.க.த.க.பாடசாலை,
மாங்கேணி, வாகரை, கல்குடா கல்விவலயம்.

ஆசிரியம்

ஆரம்பக் கல்வியானது
எந்தளவுக்கு
முக்கியத்துவம்
உடையதாக
இருக்கின்றதோ
அந்தளவுக்கு
ஆரம்பக்கல்வியினைப்
புகட்டுகின்ற
ஆசிரியர்களும்
முக்கியத்துவம்
உடையவர்களாகின்றார்கள்.

ஆரம்பக் கல்வி ஆசியர்களும் அணுகு முறைகளும்

உறுதிமிக்க அத்திவாரமே உறுதி மிகுந்த கட்டடத்தை உருவாக்கும். அத்திவாரம் பிழைத்தாலோ அந்தக் கட்டடமே பாழ்தான். இதே போன்று தான் ஒரு பிள்ளையின் வாழ்நாள் முழுவதுமான கல்விக்கு அத்திவாரமாகவும், அடிப்படை-யாகவும் அமைவது ஆரம்பக் கல்வியாகும்.

இந்த ஆரம்பம் பிழைத்தால் எல்லாமே பிழைத்து விடும். ஆகவே தான் ஆரம்பக் கல்வியின் அவசியத்தினை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் அடிமனதிலே பதித்து திடமான கொள்கைகளைத் தமக்குள்ளே வகுத்து வகுப்பறைச் செயற்-பாடுகளை வெற்றிகரமான முறையில் முன்கொண்டு செல்ல வேண்டியது கல்வி உலகத்தின் தேவையும், கட்டாய சேவை-யுமாக இருக்கின்றது.

இக் கட்டுரையினது பிரதான நோக்கம் ஆரம்பக் கல்வியினை மிகவும் அர்த்தபுஷ்டியானதாகவும், வினை திறனும் - விளைதிறனும் உடையதாகவும் நெறியாள்கை செய்வதிலும், அதற்கூடாகச் சிறந்ததோர் மாணவர் பரம்பரை-யையும் - கல்விச் சமூகத்தையும் தோற்றுவிப்பதிலும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஆற்ற வேண்டிய செயற்பங்-கென்ன? இதற்காக அவர்கள் தம்மகத்தே கொண்டிருக்க வேண்டிய ஆளுமைகள் என்ன? அணுகு முறைகள் என்ன? என அறிவதும் ஆராய்வதுமாகும்.

ஆரம்பக் கல்வியானது எந்தளவுக்கு முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றதோ அந்தளவுக்கு ஆரம்பக்கல்வி-யினைப் புகட்டுகின்ற ஆசிரியர்களும் முக்கியத்துவம் உடையவர்களாகின்றார்கள். இதனை முதலில் ஒவ்வொரு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். "ஆரம்பக் கல்வியினைக் கற்பிப்பதற்கு நாம் கொடுத்து வைத்தவர்கள்" என்ற சிந்தனைப்பாங்கு 'இந்த இதயங்களில்' உதயமாக வேண்டும்.

மாறாக ஆரம்பக் கல்வியென்றால் அதனை அடிமட்டக்-கல்வியாகக் கணிப்பிட்டு அதற்கேற்ப தம்மையும் தகுதியில் குறைந்த ஆசிரியர்களாக மதிப்பிட்டு வெறுப்புக்கும், விரக்-திக்கும், மனச்சலிப்புக்கும் மத்தியில் கடமையாற்றுவதை ஆசிரியர்கள் கைவிட்டே ஆகவேண்டும்.

இந்தக் கீழ்த்தரமான மனப்பாங்கு கட்டாயமாக ஆசிரியர்-களின் மனத்தை விட்டு மாறவேண்டும். ஏனெனில் இவ்-

வாறான மனப்பாங்குகள் தான் ஆரம்பக்கல்வியில் எழும் பல்வேறு பிரச்சினைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்து வருகின்றது. இந்நிலை மாறி சிந்தனைப் பாங்கிலே சாதகமான மாற்றங்கள் ஏற்படும் போது தான் மனப்பாங்கிலே மாற்றம் ஏற்பட முடியும்.

ஆசிரியர்களின் மனோ நிலையில் ஏற்படும் இத்தகைய மனப்பாங்கு தான் மாணவர்கள் மத்தியிலே சிறந்த மனப்பாங்கைத் தோற்றுவிக்கும். இதனை விட ஒரு ஆசிரியர் அறிவிலும், திறனிலும் ஆற்றல்களிலும், அர்ப்பணிப்பு - ஊக்கம் - தேடல் - கல்வித்தத்துவம் - கல்வித் தொழில் நுட்பம் முதலானவற்றிலும் மாற்றங்களைப் பெற வேண்டும். மாறிவரும் சூழலுக்கும், உலகுக்கும் ஏற்ற வகையில் நாமும் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

சிறந்த மாற்றங்களைப் பெறுவதன் மூலமாக சிறந்த அணுகு முறைகளையும் ஆளுமைப் பண்புகளையும் மாணவர்களிடையே ஆசிரியர்கள் பிரயோகிக்க முடியும். ஆசிரியத்துவம் என்பது மாணவர்களுடனான அணுகு முறைகளில்தான் பெரிதும் தங்கியிருக்கின்றது.

"நல்லதொரு ஆசிரியர் குழாம் இன்றி நல்லதொரு பாடசாலையை உருவாக்க முடியாது" எனக் கூறப்படுகின்றது. இதிலிருந்து நல்லதொரு ஆசிரியர் குழாமொன்றின் மூலமே நல்லதொரு பாடசாலையை உருவாக்க முடியும் என்பது நிருபணமாகின்றது. நல்ல அணுகு முறைகளும், ஆளுமைப் பண்புகளுமே நல்ல ஆசிரியர் குழாத்தினைப் பாடசாலையிலே உருவாக்கும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களே இங்கும் முக்கிய பங்காளர்களாகின்றார்கள்.

குறிப்பாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பல்வேறு விதமான நடிபங்குகள் மூலமாக மாணவர்களை அணுக வேண்டும் எனப் பெரிதும் இன்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு நண்பராக, ஆலோசகராக, துன்பத்தில் கைகொடுப்பவராக, ஆய்வாளராக. அவதானிப்பாளராக, தாயாகத் தந்தையாக, வழிகாட்டியாக, ஆராய்ச்சியாளராக, நீதிபதியாக, மேற்பார்வையாளராக - எனப் பல்தரப்பட்ட நடிபங்குகளை ஏற்று அவற்றுக்கேற்ப மாணவர்களை அணுகி கற்றல் கற்பித்தல் கருமத்தொடரினை நகர்த்திச் செல்ல வேண்டி இருக்கின்றது.

ஆரம்பக்கல்வி மாணவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் அன்பு, ஆதரவு, அரவணைப்பு முதலானவற்றையே பெரிதும் விரும்புபவர்கள். தரம் ஒன்று தொடக்கம் தரம் மூன்று வரையான மாணவர்கள் மத்தியிலே இத்தகைய விருப்புகள் பெரும் எதிர்பார்ப்புகளாக உள்ளதை அனுபவ வாயிலாக நாம் அறிய முடியும்.

பிள்ளையின் தாய் போலவும், தந்தை போலவும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மாற வேண்டும். அன்பு காட்டுவதிலும், அரவணைப்பதிலும் தாயாகவும், அறிவுரைகள் வழங்குவதில் தந்தையாகவும் நடிபங்கினை அவர்கள் ஏற்க வேண்டும்.

ஆசிரியர்களின் வார்த்தைகளிலே எப்போதும் தயவும், தாட்சண்ணியமுமே வெளிப்பட வேண்டும். தீப்பொறிகளாக அவை ஒரு போதும் பறக்கக் கூடாது. அன்பாகப் பேச வேண்டும். பண்பாகப் பழக வேண்டும்; ஆதரிக்க வேண்டும்; அவ்வப்போது மாணவர்களை அரவணைக்க வேண்டும். அன்பு, காப்பு, கணிப்பு முதலான அனைத்தையும் வழங்க வேண்டும்.

மேலும் அன்பு, பண்பு முதலானவற்றோடு வாய்மை, தூய்மை, பொறுமை, போற்றத் தகு குணம், நிதானம், சகிப்புத் தன்மை எதையும் மன்னிக்கும் சுபாவம், நேர்மை, நீதி, நியாய மனப்பாங்கு, அடக்கமும் அமைதியுமான பேச்சு, தாராளக் கொள்கை, தர்ம சிந்தை, சமத்துவ நோக்கு, சனநாயகத் தன்மை, சீரிய சிந்தனை, கூரிய புத்தி முதலான பல்வேறு விதமான ஆளுமைப் பண்புகளையும் ஆசிரியர்கள் தம்மகத்தே கொண்டு அவற்றுக்கேற்பவே ஒவ்வொரு பிள்ளைகளையும் அணுக வேண்டும்.

முறுக்கேறிய முகபாவனைகளை மாணவர்களின் முன்னால் ஆசிரியர்கள் காட்டக் கூடாது. மகிழ்ச்சியாகவும், சாந்தமுமே முகத்திலே எப்போதும் நர்த்தனம் ஆடவேண்டும். அன்பாகப் பேசி, அருளொழுகும் கண்களால் மாணவர்களை நேசித்து கற்றல், கற்பித்தல் - மதிப்பீட்டுச் செயற்பாடுகளை நடாத்தி செல்ல வேண்டும்.

இவற்றுக்கு மாறாக அதிகாரம் செய்வதாகவோ அடக்கியாள்வதாகவோ "அடியாத மாடு படியாது - படியாது" எனப் பழைய சிந்தனைப் புலத்திலே இன்னும் நின்று கொண்டு மாணவர்களை அடித்துத் துன்புறுத்துவதாகவோ வகுப்பறைச் செயற்பாடுகளை வழிநடத்தக் கூடாது. மனம்போன போக்கிலே பிழைகள், தவறுகளைப் பிள்ளைகள் விடுகின்ற போது திட்டித்தீர்க்கக் கூடாது. தகாத வார்த்தைகளைப் பேசக் கூடாது.

இவ்வாறான அணுகுமுறைகளால் குறித்த ஆசிரியரைப் பற்றி மாணவர்கள் மத்தியிலே வெறுப்பும், விரக்தியும் ஏற்படுவதோடு நாளடைவிலே அவ்வாசிரியர் கற்பிக்கும் பாடத்தின் மீதும், இதர இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மீதும் துலங்கலைப் காட்டாமல் வெறுப்பையே காட்டுவர்.

மாணவர்களிடையே உடல், உளப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் இத்தகைய பிழையான அணுகுமுறைகளாலும், ஆளுமைப் பண்புகளாலும் பிள்ளைகளின் கற்றற் பேறும், கல்வித் தரமும் குந்தக நிலையை அடையும். அது மத்திரமன்றி பாடசாலையிலே எதிர்க் கலாசாரம் தோன்றுவதற்கும் இது வழி வகுக்கும். மாறாக வடுக்கள் போல் இவை மாணவர்களின் பிஞ்சு மனங்களைத் தாக்கி அவர்-

களின் வாழ்நாள் முழுவதுமான கல்வியையே பெரிதும் பாதிக்கும்.

இந்த இடத்தில் கல்வியியலாளர் 'ஐவன் இல்லிச்' (Ivan Illich) கூறும் கருத்து நினைவு கூரத் தக்கதாகும். "நான்கு சுவர்களைக் கொண்ட ஒரு அறையைக் கல்விக் கூடம் என்பதைவிட, ஆற்றலையும் அறிவையும் மழுங்கடிக்கச் செய்யும் ஒரு சிறைச்சாலை எனலாம்" என அவர் கூறும் சிந்தனையானது முற்றிலும் எதார்த்தமானது.

வன்முறைத் தன்மை கொண்ட வகுப்பறைச் செயற்பாடுகளை ஆசிரியர்கள் எச்சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தக் கூடாது. கல்வியியலாளர் 'ஐவன் இல்லிச்' அவர்கள் கூறிய எதார்த்த நிலை மாறி ஜனநாயகத் தன்மை கொண்ட அணுகுமுறைகளும் அளுமைச் செயற்பாடுகளும் வகுப்பறையிலே அரங்கேற வேண்டும். பள்ளிக் கூடத்தினைச் சிறைக் கூடமாகப் பிள்ளை நோக்குகின்ற நிலை மாறவேண்டும். இத்தகைய மாற்றம் ஏற்படுவதற்காக ஆசிரியர்கள் உரியதும், புதியதுமான அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்.

பிள்ளைகளின் தேவைகளையும், தனியாள் வேறுபாடுகளை அறிந்தும், ஒவ்வொரு பிள்ளையினதும் வாழ்க்கைக் கோலப் பின்புலங்களைத் தெரிந்தும் அவர்களை அணுக வேண்டும். அவற்றுக்கேற்பவே கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.

மாணவர்கள் வெவ்வேறு குடும்பச் சூழ்நிலைகளில் இருந்தும், பல்வேறுபட்ட சமூகச் சூழல் நிலைகளில் இருந்தும் பாடசாலைக்கு வருபவர்கள். குடும்பவியல் சார்ந்ததும், சூழல் சார்ந்ததும், பரம்பரையியல் சார்ந்ததுமான பிள்ளைகளின் பின்னணிகளை நன்றாக அறிந்து அன்னியோன்னியமான முறையில் அணுகிக் கற்பிப்பதை ஆசிரியர்கள் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

"எல்லாப் பிள்ளைகளும் எமது பிள்ளைகளே" என்னும் 'உணர்வுப் பாரம்பரியம்' ஒவ்வொரு ஆசிரியரின் மனதிலும் எழ வேண்டும். பாரபட்சம் பார்க்கக்கூடாது; பக்கச் சார்பாக நடக்கக் கூடாது; நடுநிலைத் தன்மையில் இருந்து விலகக் கூடாது.

குறித்த பிள்ளைகளை மட்டும் கெட்டிக்காரப் பட்டம் கொடுத்துப் பாராட்டுவது, வகுப்பிலே முன்வரிசைகளிலே வைத்துக் கற்பிப்பது, அவர்களுடன் மட்டுமே சிநேகபூர்வமாகக் கதைத்துப் பேசுவது, அப்பியாசக் கொப்பிகளைத் திருத்தும் போது இவர்களிற்கே முன்னுரிமை கொடுப்பது முதலான நடத்தைப் பாங்குகளை ஆசிரியர்கள் உடனே கைவிடல் வேண்டும்.

அனைத்து மாணவர்களும் ஏதொவொரு விதத்தில் திறமை சாலிகளே.. எனவே அவர்களை அவ்வப்போது உரிய சந்தர்ப்பங்களில் திறமை கண்டு பாராட்ட வேண்டும். குறிப்பிட்ட பிள்ளைகளுக்கு மட்டுமன்றி அனைத்து பிள்ளைகளும் முன்வரிசையில் இருப்பதற்கும், முன்னால் வந்து செயற்படுவதற்கும் ஆசிரியர்கள் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள் நண்பராகவும் நடிபங்கினை ஏற்கவேண்டும். சகல மாணவர்களுடனும் சந்தோசமாகவும், சிநேக பூர்வமாகவும் கதைத்துப் பேச வேண்டும். உற்ற துணையாக இருந்து உதவ வேண்டும். அன்னியோன்னியமான அணுகுமுறைகளை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பாடசாலை என்பது ஒரு பண்பாட்டுப் பரிவர்த்தனை நிலையமாகும். அங்கே மாணவர் - மாணவர் இடைத்தொடர்பும் மாணவர் - ஆசிரியர் இடைத்தொடர்பும், இவற்றுக்கு மேலாக மாணவர் - ஆசிரியர் - பெற்றோருக்கு இடையிலான தொடர்பும் சிறந்த முறையிலே அமைய வேண்டும். எனவே இத்தகைய தொடர்பாடல்களையும், உறவுமுறைகளையும் வலுப்படுத்துவதாக ஆசிரியரின் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் அமைய வேண்டும்.

சுமுகமான உரையாடல்கள், கலந்துரையாடல்கள், குழுமுறைச் செயற்பாடுகள் முதலானவற்றை மாணவர்கள் மத்தியிலே ஏற்படுத்த வேண்டும். அவர்களைச் சுயமாகச் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் இடமளிக்க வேண்டும். வகுப்பிலே உள்ள பிள்ளைகளின் பெயர்களை ஆசிரியர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். கற்பித்தற் செயற்பாட்டின் போது மாணவர்களைப் பெயர் சொல்லியே விழிக்க வேண்டும். அல்லது "பிள்ளை" "தம்பி" என அன்பாக அழைக்க வேண்டும். இவ்வாறான அணுகுமுறைகளை ஆசிரியர்கள் எப்போதுமே பின்பற்ற வேண்டும்.

வகுப்பிலே வாய்மொழி வினாக்களைக் கேட்கும் போது எழுமாற்றாகப் பெயர் சொல்லி விழித்து பரவலாகக் கேட்க வேண்டும். அப்பியாசக் கொப்பிகளைத் திருத்தும் போது அனைவருக்கும் திருத்திக் கொடுக்க வேண்டும். திருத்தங்கள் வழங்குவது திருத்தமாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும். தரம் கண்டும் மாணவரின் திறனும் கண்டும் "good", "very good" "நன்று", "மிக நன்று" வழங்கவேண்டும்.

வகுப்பறைச் செயற்பாடுகளில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் பிள்ளைகளை அவ்வப்போது இனங்கண்டு அவர்களுக்கு அருகே சென்று அமர்ந்திருந்து "என்ன பிரச்சினை? ஏன் எழுதவில்லை? ஏன் விளங்கவில்லை?" எனக் கேட்டு ஆராய வேண்டும். அதற்கேற்ப இலகு வழியில் உதவ வேண்டும். அம்மாணவர்களையும் திறமையாகச் செயற்படத் தூண்ட வேண்டும்.

அவர்களிடையே திறமையைக் கண்டு முதுகிலே அன்பாகத் தட்டியும், கைகொடுத்தும், எல்லா மாணவர்களையும் கரகோசம் செலுத்த வைத்தும்

பராட்ட வேண்டும். மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் பிரத்தியேகத் திறமைகளை வெளிக்கொணரவும், மனதிலே அமுங்கிக் கிடக்கும் பலவிதமான பிரச்சினைகளை வெளிப்படுத்தவும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் முனைப்போடு செயற்பட வேண்டும்.

பிள்ளைகள் வீட்டிலிருந்து பாடசாலைக்கு வரும் போது பலவிதமான பிரச்சினைகளோடு வருபவர்கள்; வகுப்பறையிலும் பல பிரச்சினைகளை எதிர் நோக்குபவர்கள். இந்த நிலையில் முதலில் ஆராய்ச்சியாளராகவும், நடுநிலைத்தன்மை வாய்ந்த நீதிபதியாகவும், அறிவுரை வழங்கும் ஆலோசகராகவும் செயற்படுவது இன்றியமையாததாகும்.

என்னென்ன பிரச்சினை எந்தெந்தப் பிள்ளைகளுக்கு இருக்கிறது? அவற்றை எப்படித் தீர்க்க நட்வடிக்கை எடுக்கலாம்? என முதலில் ஆசிரியர்கள் ஆராய வேண்டும். அதே போன்று பிரச்சினைப்படும் பிள்ளைகளைக் கண்டுபிடித்து அன்பாக அழைத்து இந்தப் பிரச்சினை எப்படி வந்தது? இதற்கான காரணம் என்ன? என்பதைத் தீர விசாரித்து ஆராய வேண்டும். இதற்கேற்ப நீதிபதியாக ஆசிரியர் நடிபங்கினை ஏற்று நீதி நியாயங்களை வழங்க வேண்டும். பிரச்சினைக்குக் காரணமான பிள்ளைகளுக்கு அறிவுரைகளும் ஆலோசனைகளும் கூற வேண்டும்.

இவை தவிர உடலியல் சார்ந்த, உளவியல் சார்ந்த, குடும்பவியல் சார்ந்த பிரச்சினைகளை உடைய பிள்ளைகளும் வகுப்பறையிலே இருப்பார்கள். இவர்களையும் சரியாக ஆசிரியர்கள் அணுகி உரிய பரிகாரங்களைச் செய்ய வேண்டும். கற்றலில் பின்னடைவான மாணவர்களுக்கு பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகள் மூலம் கல்வித் தரத்தினை மேம்படுத்த வேண்டும்.

பார்வைக் குறைபாடு, கேட்டல்க் குறைபாடு உடைய பிள்ளைகளை மிகவும் அன்பாகவும், பண்பாகவும் அணுகி அவர்களை முன்வரிசையிலே வைத்துக் கற்பித்தல் - முதலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போதைய மாணவர் மையக் கல்வியிலே ஆசிரியர்கள் மையவிசைச் சக்கரமாகச் செயற்பட வேண்டி இருக்கின்றது. ஆசிரியர்கள் ஆசனத்தில் அமர்ந்தபடி கற்பிப்பதற்கு இங்கே இடமில்லை. வகுப்பறையைச் சுற்றி நடக்க வேண்டும். அனைத்து மாணவர்களையும் மேற்பார்வை செய்ய வேண்டும். இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு கதிரையை விட்டு இறங்கி வந்து அவ்வப்போது அம்மாணவர்களுக்கு அருகாக இருந்து பிரச்சினை தீர்த்து உதவ வேண்டும். அனைத்து மாணவர்களோடும் ஒருமித்துச் செயற்பட வேண்டும்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் ஆடல்-பாடல், ஆனந்தக்களிப்பு மூலமாகவும், நகைச்சுவை - நடிபங்கு, விளையாட்டு மூலமாகவும், கதை கூறல் - குழுச் செயற்பாடுகள் வாயிலாகவும் மாணவர்களின் மனங்களைக் கவரும் வகையில் கற்பிக்க வேண்டும். அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்; கூறுபவற்றை இணங்கிக் கேட்க வேண்டும். "சிறுவர்களும் சிறந்த சிந்தனையாளர்களே" எனக் கருதி பிள்ளைகளின் கருத்துகளுக்குச் செவிசாய்க்க வேண்டும். உடன் இருத்தல், உற்றுக்கேட்டல், ஒத்துணர்வு வழங்குதல் மூலமாக மாணவர்களுக்கு உதவ வேண்டும்.

கல்வியியலாளர் ஜோன்டூயியும், கல்வியியல் சார் நிறுவனமான யுனிசெப்பும் கூறுவதற்கேற்ப வகுப்பறையை மிகவும் வனப்பாக்க வேண்டும். உயிர்ப்பானதாகவும், உணர்வு பூர்வமானதாகவும், செயற்பாடுகளுடன் கூடியதாகவும் அதனை மாற்றமுறச் செய்ய வேண்டும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வகுப்பறையினைக் கவர்ச்சிகரமானதாய் ஆக்குவதிலும், கவர்ச்சிகரமான கற்பித்தலை ஏற்படுத்துவதிலும் கூடிய கரிசனை காட்ட வேண்டும். மாணவர்களுடன் எப்பொழுதும் இடையறாத் தொடர்பில் ஈடுபடவேண்டும். அவர்களுடன் கைகோர்த்து கற்றல் கற்பித்தல் கருமத் தொடரினை முன்நகர்த்திச் செல்ல வேண்டும்.

ஆரம்பக் கல்வியிலே "ஆசிரியரின் ஆயத்த நிலை" என்பது மிகவும் இன்றியமையாததாகும். பாடத்திட்டம், வேலைத்திட்டம், பாடக்குறிப்பு பொருத்தமான கற்பித்தற் சாதனங்கள் என்பவற்றோடு வகுப்பறைக்குள்ளே நுழைந்த பின்னர் மாணவர்களை எவ்வாறு அணுக வேண்டும்? பாடத்தை எப்படித் தொட்ங்க வேண்டும்? எப்படிப் படிமுறையாக அதனை வளர்த்துச் செல்ல வேண்டும்? எப்படி முடிக்க வேண்டும்?, பாடச்சுருக்கம், மீளவலியுறுத்தல் மதிப்பீடு, முன்னூட்டல், பின்னூட்டல் எவ்வாறு அமைய வேண்டும்? என்பவற்றைப் பற்றிய "மனத்திட்டம்" முதலானவற்றிலும் பாடம் தொடர்பான போதிய அறிவிலும் ஆசிரியர்கள் கூடிய ஆயத்தத்தோடு இருக்க வேண்டும்.

அதாவது "உளவியல் தெரியாமல் உள்ளே போக வேண்டாம்" என உளவியல்த் தத்துவம் உணர்த்துவதற்கேற்பவும், "ஆயத்தம் எதுவும் இல்லாமல் வகுப்பறைக்குள்ளே பிரவேசிக்க வேண்டாம்" என கல்வித் தத்துவம் இன்று வலியுறுத்தி வருவதற்கேற்பவும் முழு ஆயத்தத்தோடு தான் வகுப்பறைகளுக்குள்ளே ஆசிரியர்கள் நுழைய வேண்டிய தேவை எழுந்திருக்கிறது. அப்போது தான் மாணவர்களைச் சிறந்த முறையிலும் உரிய முறையிலும் அணுக முடியும்.

மேலும் ஆசிரியர்கள் சிறந்த கற்றல் சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பாடத்தைச் சிறுசிறு அலகுகளாகப் பிரித்து மாணவர்களுக்கு விளக்கத் தக்க வகையில் கற்பிக்க வேண்டும். மாணவர்களின் முழுக்கவனத்தையும் கல்வியின் பால் ஈர்த்துக்

கொள்ள வேண்டும். தம்மீது நேரான மனப்பான்மை மாணவர் மத்தியிலே ஏற்படும் வண்ணம் ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும். தம்மில் அக்கறையுடன் ஆசிரியர்கள் அயராது செயற்படுகின்றார்கள் என்பதை உணர வைத்தல் வேண்டும். வகுப்பறையிலும், வகுப்பறைக்கு வெளியிலும் ஆசிரியர்கள் காட்சிக்கு எளியவராகவும், கருத்துக்கு இனியவராகவும் நடந்து கொள்ள வேண்டும். மாணவர்கள் முன்னாள் எப்போதுமே முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும்.

இவை தவிர சிறந்ததோர் ஆசிரியரின் மாணவர் மீதான அணுகுமுறைகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ள முடியும்.

- அமைதியான சைகை, குறியீடுகள் மூலம் செய்தி அனுப்புதல்.
- அமைதியாக ஞாபகப்படுத்தல் செயற்பாடுகளைச் செய்தல்.
- புதிய புதிய செயற்பாடுகளுடன் பாடத்தை ஆரம்பித்தல்.
- மாற்று ஏற்பாடுகளை வகுப்பறைக்குக் கொண்டு வருதல்.
- பாடத்தின் போது குரல்மாற்றி நகைச்சுவையாக இயங்குதல்.
- நேர்வகையான துலங்கல்களை மீளவலியுறுத்துதல்.
- ஒவ்வொரு மாணவரின் செயற்பாடுகளுக்கும் போதிய அவகாசம் கொடுத்தல்.
- வகுப்பறையில் மாணவர்கள் ஒழுங்குவிதிகளை மீறும்போது யார் செய்தார்கள்? என்பதை அறிவதை விடுத்து எதற்காகச் செய்தார்கள்? என்பதை அறிய முற்படுதல்.
- ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எல்லா மாணவர்களும் எல்லா ஆசிரியர்களாலும் அவதானிக்கப்படுகிறார்கள் என்பதை மாணவர் உணரக் கூடியதான செயற்பாடுகளில் ஆசிரியர்கள் ஈடுபடுதல்.

இத்தகைய அணுகுமுறைகள் மூலமாகவும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை வினைதிறனும், விளைதிறனும் கொண்டதாக மேம்படுத்த முடியும்.

இவ்வாறாக இங்கே முன்வைக்கப்பட்ட அணுகு முறைகள் அனைத்தும் ஆரம்பக்கல்வி, இடை நிலைக்கல்வி, உயர்நிலைக் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பொதுவானதாக இருந்தாலும் கூட ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கே இவை மிகவும் பொருத்தமாக அமைந்து விடுகின்றன எனலாம்.

வகுப்பறையிலும், வகுப்பறைக்கு வெளியிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் குறிப்பாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தம் மாணவச் செல்வங்களோடு மிகவும் அன்னியோன்னியமாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்ள வேண்டி இருக்கின்றது. பல்பரிமாண அணுகு முறைகளுக்கூடாக அம்மாணவரை அறிவு, திறன், மனப்பாங்கு சமூக விருத்தி, ஒழுக்கநெறி விழுமியங்கள் - முதலானவற்றில் மிளிரச் செய்ய வேண்டி இருக்கின்றது.

சுருங்கச் சொன்னால் சிறந்த அணுகு முறைகளும், ஆளுமைப் பண்புகளும் உடைய ஆசிரியப் பரம்பரையாலேயே சிறந்த மாணவப் பரம்பரையையும் கல்விச் சமூகத்தையும் உருவாக்க முடியும்.

கலைத்திட்டத்திற் கணினிச்
செயற்பாடுகளை ஒன்றிணைத்தல்

புதிய தகவற் காலத்துக்கு (New Information Age) ஏற்றவாறு கலைத்திட்டத்தை ஒழுங்கமைக்க வேண்டிய தேவை அண்மைக்காலமாக தீவிர வற்புறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது. கலைத்திட்டத்தையும் கணினிகளையும் ஒன்றிணைப்பதற்கான உலக நோக்கில் அமைந்த கொள்கைகளும், நடைமுறைகளும் உருவாக்கப்படுவதன் தேவையைக் கல்வியியலாளர் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

கலைத்திட்டமும் கணினியும் பற்றிய ஆய்வில் நான்கு கோட்பாடுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அவை

1. கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் தொழில் நுட்பவியல் சேவை செய்யும்.
2. ஆசிரியரும் மாணவரும் உடனடி அறிவு நோக்கிய அணைதலை (Access) வேண்டி நிற்கின்றனர்.
3. கலைத்திட்டத்திலே தகவல் தொழில் நுட்பம் நீக்கமற ஒன்றிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. இத்துறையில் வினையாற்றலுடன் பயன்படுத்தப்படுவதற்கு வகுப்பறையிலே பிரயோகிப்பதற்குமுரிய பயிற்சியும் மீள் பயிற்சியும் ஆசிரியர்களுக்குத் தரப்படல் வேண்டும்.

-சபா ஜெயராசா-

சபா.ஜெயராசா,
முன்னாள் பேராசிரியர்,
கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

சிறப்புக் கட்டுரை

தொழில் சார் ஆற்றுப்படுத்தல் பெருமளவிலே கல்விசார்ந்த நடவடிக்கையாகின்றது. ஆனால் சீர்மியம் என்பது பெருமளவில் உளவியல் சார்ந்த நடவடிக்கையாகின்றது.

தொழில்சார் ஆற்றுப்படுத்தல் - கல்வியியல் நிலைப்பட்ட புலக்காட்சி

பாடசாலை மட்டத்தொழில்சார் ஆற்றுப்படுத்தற் (Guidance) பணி விரிவடைந்து வரும் கல்விச் செயற்பாடாகி வருகின்றது. ஒருவர் தன்னியல்பை மேம்படுத்திக் கொள்வதற்கும், சமூகத்துக்குப் பயனுள்ள பங்காளியாகத் தொழிற்படுவதற்கும் தமது ஆற்றலுக்குரிய வகையில் தொழில் தெரிவுகளை நுண்மதி முனைப்புடன் மேற்கொள்வதற்கும் தொழில்சார் ஆற்றுப்படுத்தற் பணி அல்லது வழிகாட்டற் பணி துணை செய்கின்றது.

தொழில் சார் ஆற்றுப்படுத்தல் பெருமளவிலே கல்விசார்ந்த நடவடிக்கையாகின்றது. ஆனால் சீர்மியம் என்பது பெருமளவில் உளவியல் சார்ந்த நடவடிக்கையாகின்றது. ஆற்றுப்படுத்தற் செயற்பாடு கற்றல் கற்பித்தலோடு ஒன்றிணைந்த நடவடிக்கையாகின்றது. கற்பவரைத் தொழில் உலகத்தோடு இணைத்து வைக்கும் நடவடிக்கையாகவும் அது அமைகின்றது.

தொழில் சார் ஆற்றுப்படுத்தலை முன்னெடுக்கும் ஆசிரியர் பின்வரும் செயல் இணைப்புக்கள் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

- மாணவரின் விருப்பு வெறுப்புக்களும் உளப்பாங்குகளும்.
- ஆற்றல்களை வெளிப்படுத்தும் பாடப் பரப்புக்கள்.
- மாணவர் மனம் விட்டுப் பழகும் குழுக்களின் இயல்புகள்
- குழும்ப நிலையும், இயல்பும்.
- அடைந்த வெற்றிகளும் அடைய வெண்ணும் இலக்குகளும்.
- மாணவர் மேற்கொள்ளும் பொழுது போக்குச் செயற்பாடுகளின் வகையும் இயல்புகளும்
- ஆக்கத்திறன் வெளிப்படும் துறைகள்.
- அவர்களால் விரும்பப்படும் சமூகவகிபாகங்கள்.
- அவர்களைக் கவரும் சமூக மாதிரிகையினர்.
- மாணவர்களின் பலநிலை நுண்மதி (Multiple Intelligence) மற்றும் மனவெழுச்சி நுண்மதி முதலியவற்றின் இயல்பு.

கடந்த நூற்றாண்டிலிருந்து விரிவாக்கம் பெற்று வரும் வரன்முறைக் கல்வி நடவடிக்கைகளும், கல்வி வழியாகத் தொழில் பெறும் உந்துதல்களும், கல்வியிலும் தொழில்களிலும் போட்டியின் இயல்புகள் ஒன்றிணைந்து கொண்டமையும்,

"தெரிவு" என்ற செயற்பாடு சமூகத்தில் வளர்ச்சியடைந்தமையும், தொழில்களிலே வினைத்திறனை ஏற்படுத்தலும் பராமரித்தலும் மேலோங்கத் தொடங்கியமையும் ஆற்றுப்படுத்தற் சேவைப் பாடசாலைகளிலே நிலை கொள்ளச் செய்தன.

இவ்வகையில் நவீன ஆற்றப்படுத்தற் சேவை 1908 ஆம் ஆண்டளவில் பிராங் பார்சன் என்பவரால் போஸ்டனில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொழில்களோடு பொருந்திக் கொள்ள முடியாதவர்கள் (Misfits) குறித்த தொழில்களிலே நுழைவதைத் தடுப்பதற்கும் பொருத்தமானவர்கள் பொருத்தமான தொழிலைப் பெற்றுக் கொள்வதற்குமுரிய முன்னேற்பாடாகப் பாடசாலைகளில் தொழில்சார் ஆற்றுப்படுத்தற் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல்வேறு நகரங்களிலும் தொழில் ஆற்றுப்படுத்தற் சேவை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக 1913 ஆண்டில் "தேசிய தொழில் ஆற்றுப்படுத்தற் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இத்துறையின் பிறிதொரு முன்னோடியாகிய ஜி.சி.பி.டேவிஸ் என்பவர் அத்துறையின் வளர்ச்சியிலே தீவிர பங்காற்றுத் தொடங்கினார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்திலிருந்து கல்வி நடவடிக்கைகளில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்படலாயின. அவற்றைப் பின் வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- ஆரம்பம் மற்றும் இடைநிலைப்பாடசாலைகளிலே சேரும் மாணவரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படத் தொடங்கியமை.
- பெண்களினதும் கிராமப் புறத்தவர்களதும் பாடசாலைப் பங்குபற்றல் அதிகரிக்கத் தொடங்கியமை.
- முதலாம் உலகயுத்தத்தைத் தொடர்ந்து மனித ஆற்றல்களின் பலவகை இயல்புகளையும், பரிமாணங்களையும் கண்டறிவதற்குரிய "கணிப்பீட்டு இயக்கம்" வளர்ச்சி பெறத் தொடங்க, ஒவ்வொருவரிடத்தும் எழுச்சிகொண்டுள்ள தனித்துவம் உய்தறியப்பட்டதுடன், அதற்கியைந்த தொழில் சார் முயற்சிகளும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளும் உருவாக்கம் பெறலாயின.
- கிளிபோர்ட் டபிள்யூ பியேர்ஸ் என்பார் 1908 ஆம் ஆண்டில் எழுதிய "தன்னை அமைத்துக் கொண்ட ஒரு மனம்" என்ற நூலை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து "மன நல இயக்கம்" Mental Hygiene Movement உத்வேகம் பெறலாயிற்று. உடல் நலத்துக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை மன நலனுக்கும் கொடுக்க வேண்டுமென்ற அறிகை எழுச்சி கொள்ளலாயிற்று. சிறு வயதிலிருந்து வளர்ச்சி பெற்று வரும் சீராக்கப் பிறழ்வுகளைப் பொருத்தமான உளவியல் அணுகுமுறைகளாலும், ஆற்றுப்படுத்தலினாலும் மாற்றியமைக்க முடியும் என்று கருதப்பட்டது.
- கடந்த நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து வளர்ச்சி பெறத் தொடங்கிய கலைத்திட்ட மேம்பாட்டு நடவடிக்கைகள் வளர்ந்து வரும் அறிவின் உள்ளடக்கம், தொழில் உலகோடு மாணவரை இணங்க வைத்தல் அனுபவ வழிக்கல்வி தனியாள் இயல்புகளைக் கருத்திலே கொள்ளல், தெரிவுச் சுதந்திரத்துக்கு இடமளித்தல் முதலாம் பரிமாணங்களை அடியொற்றி விரிவடையலாயின.
- கல்விச் செயல்முறையில் உளவியல் விசைகளின் செல்வாக்குகளும் ஆற்றப்படுத்தலின் முக்கியத்துவத்துக்கு வலுவூட்டலாயின, கலைத்திட்ட ஆக்கம், பாட நூலாக்கம், கற்பித்தல் முறைகள், கணிப்பீடுகள் என்ற வாறு பல துறைகளிலும் உளவியல் ஊடுருவத் தொடங்கியுள்ளது. சீர்மிய நாடிகளை நடுவனாகக் கொண்ட (Client Centered) அணுகுமுறைகளின் வளர்ச்சி ஆற்றுப்படுத்தற் பணிக்கு வலுவூட்டத் தொடங்கியது.
- ஒழுங்குபடுத்தப்பட்ட சமூக வேலை (Social Work) யின் வளர்ச்சி மாணவரின் நடத்தைகளிலே செல்வாக்குச் செலுத்தும் பன்முகக் காரணிகள் மீது கவனக்குவிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு வலுவூட்டுவதாக வளரத் தொடங்கியுள்ளது. ஆசிரியருக்குத்துணையாக சமூக வேலையாட்கள் இணைந்து தொழிற்படும் நிலமையும் ஏற்படத் தொடங்கியுள்ளது.

நவீன ஆற்றப்படுத்தற் சேவை 1908 ஆம் ஆண்டளவில் பிராங் பார்சன் என்பவரால் போஸ்டனில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொழில்களோடு பொருந்திக் கொள்ள முடியாதவர்கள் குறித்த தொழில்களிலே நுழைவதைத் தடுப்பதற்கும் பொருத்தமானவர்கள் பொருத்தமான தொழிலைப் பெற்றுக் கொள்வதற்குமுரிய முன்னேற்பாடாக

ஆற்றுப்படுத்தலின் ஒவ்வொரு பிரிவும் தனித்துவமானவை. ஆனால் அவை ஒன்றுடன் மற்றையது தொடர்பும் கொண்டவை. எடுத்துக்காட்டாகத் தொழில் தெரிவை மேற்கொள்ளும் பொழுது, கல்வித் தெரிவு, உளப்பாங்கு, ஆளுமை இயல்பு சமூகத் தொடர்புகள் போன்ற பல தனித்துவங்களைக் கருத்திலே கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனை ஒற்றை முறைமை (Unitary) என்ற எண்ணக்கருவால் அழைப்பர்.

ஆற்றுப்படுத்தல் என்பது நோயாளிக்கு மருந்துச்சிட்டை (Prescription) கொடுப்பது போன்ற செயற்பாடு அன்று. தெரிவின் முதன்மையாளராக

மாணவரே இருத்தல் வேண்டுமே அன்றி ஆசிரியர் இருத்தலாகாது. ஆசிரியர் வளந்தருனுரர் என்ற பாத்திரத்தையே மேற்கொள்ளல் வேண்டும்.

தமது தொழிலைத் தாமே கண்டு பிடித்துக் கொள்பவராக மாணவரை ஊக்கப்படுத்துதல் ஆசிரியரின் பணியாகின்றது.

தொழில் ஆற்றுப்படுத்தலும் கல்வி ஆற்றுப்படுத்தலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்பட வேண்டியுள்ளன. தொழில்களின் பெருக்கமும் அவற்றுக்குரிய திறன்களின் பெருக்கமும் நிகழ்ந்துகொண்டிருக்கும் வேளை அவை பற்றிய அறிவார்ந்த நோக்கைக்கல்விச் செயல் முறையின் வாயிலாகக் கையளிக்க வேண்டியுள்ளது. பொருத்தமான தொழில் தெரிவு தொழிலின் தரத்தை உயர்த்துவதாகவும் அதே வேளை தொழில் திருப்தியை வழங்குவதாகவும் அமையும், அது சமூகப் பயனுடைய செயற்பாடாகவும் அமையும்.

தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் பின்வரும் அறிபரப்புக்களை உள்ளடக்கியதாக அமையும்.

- பல்வேறு வகையான தொழில்கள் பற்றியும் அறிந்து கொள்ளல்.
- மாணவரின் உளச்சார்பைத் தெரிந்தறிதல்.
- குறித்த தொழிலுக்குரிய அடிப்படை அறிவையும் கற்கை நெறியையும் தெரிந்தெடுத்தல்
- ஈடுபாடு கொண்டு தொழிற்படலும் மேலதிக தரவுகளைப் பெற்றுக் கொள்ளலும்.
- குறிப்பிட்ட தொழிலுக்குரிய மீயாற்றல்களை வளர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் இறங்குதல்.
- குறிப்பிட்ட தொழில் நிகழும் இடங்களுக்குச் சென்று நேரடி அனுபவங்களைத் திரட்டிக் கொள்ளல்

தொழில்சார் ஆற்றுப்படுத்தலை வழங்குவதால் மட்டும் கல்வி உலகுக்கு தொழில் உலகுக்கும் இடையேயுள்ள இடைவெளியை நிரவி விட முடியாது. கல்வியின் விரிவுக்கும் வளர்ச்சிக்கும் சமாந்தரமாக தொழில்களிலும் வளர்ச்சி ஏற்படல் வேண்டும். தொழில்கள் வளர்ச்சி யாது தொழில்-சார் ஆற்றுப்படுத்தற் செயற்பாடுகளாற் பயனில்லை. தொழில் வளர்ச்சியோடு இணைந்து நிற்கும் உழைப்பும், பறிப்பும், சுரண்டலும் மிகுந்து வரும் சமகாலத்தில் அந்த அநீதியின் இயல்புகளும் மாணவர்களுக்குத் தெரியப்படுத்தப்படல் வேண்டும். பல்தேசிய நிறுவனங்கள் மூர்க்கத்தனமாக மேற்கொண்டுவரும் பல்வகைமை சார்ந்த பறிப்பின் இயல்புகளை அறியாதவிடத்து மாணவர்கள் சிந்தனை இருளில் விடப்பட்டவர்களாகவே இருப்பார்கள். ஆனால் மேலை நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கியமான இந்தப் பரிமாணம் கைவிடப்பட்டுள்ளது. சுரண்டுவோருக்குச் சாதகமான தொழில் வழிகாட்டற் பணியே அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வளர் முக நாடுகளும் அவற்றை விமர்சிக்காது அப்படியே பின் பற்றி வருதல் அபத்தமாகிவிடுகின்றது.

மேலைப் புலத்துக் கல்விப் பொதிகளை இறக்குமதி செய்து திறனாய்வின்றி அப்படியே எமது மாணவர்களுக்கு வழங்கும் நடவடிக்கைக்கு முற்றுப் புள்ளி வைக்காது விடில் மேலும் அனர்த்தங்களை நோக்கியே செல்ல வேண்டி நேரிடும்.

குழந்தைகளின் வயது வளர்ச்சியுடன் இணைந்த செயற்பணிகளை வழங்கிய பியாசே அறிகை விருத்திப் படிநிலைகளைப் பின்வருமாறு விளக்கலானார்.

1. புலன் இயக்கப்பருவம் - பிறப்பிலிருந்து இரண்டு வயது வரை.
2. தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் - இரண்டு வயது தொடக்கம் ஏழுவயதுவரை.
3. தூல சிந்தனைப்பருவம் - ஏழுவயது தொடக்கம் பதினொரு வயது வரை.
4. நியம சிந்தனைப் பருவம் - பதினொரு வயதைத் தொடர்ந்து நிகழ்வது.

-சபா ஜெயராசா-



ப.இராஜேஸ்வரன்
யா/சரவணை சின்னமடு றோ.க.பா,
தீவகக் கல்வி வலயம்.

ஊடகக்கல்வி

இன்று உலகம்
கிராமமாகிவிட்டது.
தகவல் புரட்சியின்
காரணமாக உலகம்
சுருங்கிவிட்டது
என்ற கருத்து
நிலை வலுப்
பெறுகின்றதை
அவதானிக்க
முடிகின்றது.

அபிவிருத்திக்கான ஊடக வழிக்கல்வியும், ஊடக கல்வியும்

இன்று உலகம் கிராமமாகிவிட்டது. தகவல் புரட்சியின் காரணமாக உலகம் சுருங்கிவிட்டது என்ற கருத்து நிலை வலுப் பெறுகின்றதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு ஊடகங்களின் விரைவான வளர்ச்சியும், செயற்றினும் தொடர்பாடல் திறன் விரிவாக்கமுமே அடிப்படைக் காரணமாக அமைகின்றது. ஊடகங்களின் ஊடாக தகவல் பரப்புகை நடை பெறுகின்றது. இதனால் மனித அறிகை அமைப்பில் மாற்றம் ஏற்படுவதுடன் புதிய விடயங்களை அறியும் தன்மை ஏற்படுகின்றது. இத்தகைய மாற்ற நிலைகள் மனித அபிவிருத்திக்கும் தேச அபிவிருத்திக்கும் அடிப்படையாக அமைகின்றது. அதே போல் தான் தொடர்பாடல் கற்கையில் உலக தொடர்பு வலைப் பின்னல் முக்கிய பங்கு வகிப்பதைக் காண முடிகிறது.

ஊடகம் மற்றும் தொடர்பாடல் செயற்பாட்டு கருவியூடாக கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க முடியும். சிறுவர், இளம் வயதினர், வயோதிபர்களுக்கு கல்விச் செயற்பாட்டை நன்கு திட்டமிட்ட வகையில் விருத்தி செய்ய முடியும். இதற்கு மனிதனின் இயல்புகள் விருப்புணர்வுகள் ஆரம்பம் முதலே ஊடகங்கள் மீதும். தொடர் பாடல் கருவிகள் மூலமும் கட்டியெழுப்பப்படுகின்றன. இத்தகைய சாதகத் தன்மையை உளவியல் அணுகு முறையை கல்விச் செயற்பாட்டில் இணைப்பதன் மூலம் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இன்று உலகளாவிய ரீதியில் கல்விச் செயற்பாடு பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையம் என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஒரு பிள்ளையின் கல்விச் செயற்பாட்டிலும், ஆளுமைச் செயற்பாட்டிலும் ஊடகம் மற்றும் தொடர்பாடல் கருவிகளின் செல்வாக்கு நேரடியாகவும் மறை முகமாகவும் நன்மை, தீமை என்ற அடிப்படையில் பிரதிபலிப்பதை உணர முடிகிறது.

இங்கு பிள்ளையினது அறிகை விருத்திச் செயற்பாட்டுக்கு கற்பித்தல் கருவியாக, ஊடக வழியாக கற்கையை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதைப் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதாகும். இதற்கு உலகளாவியரீதியில் குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பிள்ளைகள் மத்தியில் வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, பத்திரிகை கிடைக்கப் பெறாமை 16.1 சதவீதம் என 'உலக சிறுவர் நிலை 2005' அறிக்கை குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்ட முடியும்.

ஏனைய சதவீத மூலம் ஊடகங்களின் வசதி வாய்ப்பு கிடைக்கப் பெறுவதை மற்றொரு வகையில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வறிக்கையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 300 மில்லியன் பிள்ளைகளுக்கு மேல் தகவல் மறுக்கப்பட்டவர்கள் என குறிக்கப்பட்டுள்ளது. போதிய தகவல் பெறும் வாய்ப்பு இன்றி பரந்து பட்ட அர்த்தத்தில் கல்வி மறுக்கப்பட்டவர்களாக பிள்ளைகள் உள்ளனர். பின்வரும் அட்டவணை - 01 பிராந்திய ரீதியில் தகவல் பெற மறுக்கப்பட்டவர்களின் நிலை சதவீதத்தில் காட்டுவதாக அமைகிறது.

அட்டவணை - 01

பிராந்தியம்	சதவீதம்
உபசகாரா - ஆபிரிக்கா	28
தென்னாசியா	28
மத்திய கிழக்கு	07
லத்தீன் அமெரிக்கா	00
கரிபியா	05
மத்திய மேற்கு ஆசியா	04
கிழக்காசியாவும் பசுபிக்கும்	06

(மூலம்: உலக சிறுவர் நிலை - 2005)

உலகளாவிய போக்கில் இலங்கையில் தகவல் பெறும் விருத்திநிலை பிற்போக்கான மட்டத்திலேயே உள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் அரசு பல்வேறு செயற்பாடுகளை முன் எடுத்து வருவதை குறிப்பிட முடியும். பாடசாலைக் கல்வித் திட்டத்தில் 2006 முதல் ஊடக மற்றும் தொடர்பாடல் கல்வியை விருப்பத்துக்குரிய பாடமாக க.பொ.த சாதாரணதரத்துக்கு அறிமுகம் செய்யப்படுகிறது. இதைவிட தகவல் தொடர்பு சாதனங்களுக்கான வரி குறைப்பும் உள்ளது. மேலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஊடகக் கல்விச் செயற்பாடுகள் முனைப்புப் பெற்று வருகின்றன. தொடர்ந்து வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு பற்றிய சிந்தனையும் தகவல் வலையமைப்பு வசதிக்கான விரிவாக்க நடைமுறைகளும் முனைப்புப் பெற்று வருவதையும் குறிப்பிட முடியும்.

மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான ஆற்றல் தகவல் தொழில் நுட்பத்திற்கு உண்டு. தற்போது இணையப் பல்கலைக்க கழகங்களின் மூலம் இவ்வுயர் கல்வியை விரிவாக்க முடியும். இதைவிட எந்தப் பல்கலைக் கழகத்துடனும் உரையாடக்கூடிய Video Conferencing முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எந்த விரிவுரையையும் Broad band Media ஊடாக சேமித்து வைத்து தேவையான போது பயன்படுத்த முடியும். இதன் மூலம் வழிக் கற்கை விரிவடைந்து விட்டதை அவதானிக்க முடிகின்றது.

உலக சிறுவர் அறிக்கைப்படி 2004, 2005ம் ஆண்டில் சனத்தொகையில் நூறுபேருக்கு எத்தனை பேர் ஊடகவழிக் கல்வியை பெறுகின்றனர் என்பதை பின்வரும் அட்டவணை - 02ன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

அட்டவணை - 02

அறிக்கை	இலங்கை	தெற்காசியா	தொழில் மய நாடு	இலங்கை	தென்னாசியா	தொழில் மய விருத்தி நாடுகள்
2004	08	04	117	01	01	37
2005	10	04	123	01	02	43

மூலம் :- உலக சிறுவர் அறிக்கை - 2004-2005

அட்டவணை - 02 இன் ஊடாக இலங்கை, தெற்காசியா தொழில்மய நாடுகளின் தொழில்மய விருத்தி நிலைகளின் அடைவு நிலையை ஒப்பிட்டு நோக்கிக் கொள்ள முடியும். இலங்கை மற்றும் தெற்காசிய பிரதேச தொடர்பாடல் விருத்தி நிலைகளை வளர்முக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது மிகப் பின்னடைவில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இத்தகவலை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது இலங்கை மற்றும் தெற்காசியா நாடுகளின் தொடர்பாடல் மற்றும் ஊடக வழிக் கல்வியின் பிற்போக்கான நிலையைக் கருத்திற் கொண்டு அவற்றிலிருந்து மீளும் வகையிலும், அபிவிருத்தியை எய்தும் வகையிலும் பல்வேறு செயற்றிட்டங்களை நாடளாவிய ரீதியிலும், ஆசிய ரீதியிலும் மேற்கொள்ளப்படுதல் அவசியமாகின்றது.

ஊடகம் தொடர்பான கல்வி அபிவிருத்தியையும், தொடர்பாடல் கல்வியையும் பரந்துபட்ட வகையில் நீண்ட கால நோக்கிய விரிவாக்கிக் கொள்வதற்கு தொழில்சார் வாண்மைத்துவ அபிவிருத்திச் செயற்பாடு முக்கியமாகின்றது. ஊடக மற்றும் தொடர்பாடல் கற்கை சார்பான வாண்மைத்துவ நிலையை பாடசாலை மட்டம், தேசிய கல்வியியற் கல்லூரி, பல்கலைக்கழக மட்டம் என்ற அடிப்படையில் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட கற்கை நெறியாக அதற்கென

கலைத்திட்ட உருவாக்கத்தின் அடிப்படையில் அமுலாக்குவது அவசியம்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஊடககல்வி, தொடர்பாடல்கல்வி 2007ம் ஆண்டு முதல் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் க.பொ.த சாதாரண மட்டத்தில் விருப்பத்திற்குரிய கற்கைகளில் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளதை ஆரோக்கியமான செயற்பாடாகக் கொள்ள முடியும். இவ்வாறான அமுலாக்கத்திற்கு முன்னோடியாக மாணவர்களுக்கு கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு ஆசிரியர்களை உருவாக்குவது மிக அவசியம். அதற்கு தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஊடகக் கல்வி மற்றும் தொடர்பாடல் கற்கைக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவித்தலுக்கு திட்டமிடல் வேண்டும்.

பல்கலைக்கழக மட்டத்தில் கலைமாணி கற்கை நெறி அறிமுகம் செய்வதுடன் முதுமாணி கற்கை நெறிகளைக் கற்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் இத்துறை சார்பான எண்ணக்கருக்களை உள்வாங்குவதும் அவசியம்.

தொடர்ந்து அரசசார்பற்ற நிறுவன உதவியுடன் ஊடகக் கல்வியை அபிவிருத்தி செய்ய பல்வேறு திட்டங்களை வகுப்பதுடன் இந்தக் கற்கை நெறியை விருத்தி செய்யும் வகையிலான நூலாக்க முயற்சிகளையும் ஊக்குவிக்க வேண்டும். மேலும் ஊடகங்களின் ஊடாக இந்தக் கற்கை நெறி தொடர்பான சிந்தனைகளைக் கட்டியெழுப்பலாம்.

ஊடக நிறுவனங்களுடன் ஆரோக்கியமான சுமுகமான உறவைப் பேணுவதுடன் இடைவினைத் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் வளமான ஊடக தொடர்பாடல் துறையை விருத்தி செய்வதற்கு சாதகனமான சூழலை உருவாக்கமுடியும். தொடர்பாடல் கருவிகளின் உபயோகத் தன்மையை அதிகரிக்க சட்டரீதியில் நடவடிக்கையை மேற்கொள்வதுடன் அதற்கான வரிவிகிதத்தைக் குறைக்க ஆவன செய்யவேண்டும். தொடர்பாடல் மற்றும் ஊடக சுதந்திரத்தை நடைமுறையில் சாத்தியப்படும் வகையில் பன்முகச் செயற்த்திட்டங்களை விருத்தி செய்ய வேண்டும்.

தொடர்பாடல் கருவிகளின் கையாட்சித் தன்மையை தன் மயப்படுத்திக் கையாள சிறுவயது முதலே சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல் மிக பொருத்தமாக இருக்கும். ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடசாலை மட்டத்தில் இருந்தே தொடர்பாடல் திறன்களையும் ஊடகக் கல்வித் தேர்ச்சிகளையும் ஏற்படுத்த கற்றல் செயற்பாட்டை விரிவாக்க வேண்டும்.

ஊடகங்களின் ஊடாகக் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க ஊடகவழிக் கற்கை முறையை திட்டமிட்டு அமுல்படுத்த வேண்டும். இதற்கு சமுதாய வானொலித்திட்டம், சமுதாய தொலைக்காட்சித் திட்டம், ஒளிபரப்புத் திட்டம் போன்ற திட்டச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். நாடளாவியரீதியில் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு தொலைத் தொடர்பு, இணையத்தள தொடர்பை விரிவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அபிவிருத்தி என்பது நாட்டின் தேசிய மற்றும் உலகளாவிய தரநிலைகளுடன் தொடர்புபட்டது. ஓர் நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாற்றம் பெறுவதை அபிவிருத்தி நிலை எனக் கொள்ளலாம். இதில் உயர்வு அல்லது மேம்பாடு என்பது முக்கியமானது. அபிவிருத்தி மக்கள் உற்பத்தி, மக்களுடன் நேரடித் தொடர்புபட்டது. மக்களை சாதகமாக பயன்படுத்துவதன் ஊடாக அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லலாம். மக்களுடன் தொடர்புபட்ட அபிவிருத்திச் செயற்பாட்டை மக்களுடன் தொடர்பு கொள்கின்ற ஊடகங்கள் மூலமே வழி நடத்திச் செல்ல முடியும்.

உலகளாவிய ரீதியில் அபிவிருத்திச் செயற்பாடு மூன்றாம் உலக நாடுகளுடன் தொடர்புபட்ட செயற்பாடாகவே கணிசமாக உள்ளது. காரணம் இந்த நாடுகள் காலனித்துவ ஆளுகைக்குள் இருந்தமையே ஆகும். இதனால் இந் நாடுகள் மேலை நாடுகள் போல முன்னேறவும், அபிவிருத்தியடையவும் முயற்சிக்கத் தொடங்கியுள்ளன. இதற்கு பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் மற்றும் நடைமுறை முக்கியமாகின்றது. அபிவிருத்திக்கு ஊடக பயன்பாட்டை கையாளுவதில் இந்நாடுகள் முனைப்புடன் செயற்படவேண்டும்.

அபிவிருத்தியில் தொடர்பியலை பயன்படுத்தும் வகையினால் "அபிவிருத்தித்தொடர்பியல்" என்ற எண்ணக்கரு ஊடகப்புலம் சார்பாக வலுவடைந்து வருகிறது. "எவரட் கிளிஞ்சன்ஸ்" தொழில்நுட்பரீதியாக மட்டுமல்லாமல் புதுவிதமான கருத்துக்கள், திறமைகள், விழிப்புணர்வு, மனித உணர்வில் தோன்றும் புதிய எண்ணப்பாங்குகள் அபிவிருத்தி தொடர்பியலுள் அடங்கும் எனக் குறிப்பிடுகின்றார்.

அறிஞர் "டட்லி சிர்ஸ்" மக்களுக்கு தேசிய ரீதியிலான திட்டங்கள், செயற்பாடுகள் போன்றவற்றை அறிவிப்பதும் அது தொடர்பாக அவர்களை ஊக்குவிப்பது முக்கியம் என்கிறார். "டானியல் லேனர்" ஊடகம் மூலம் நவீனமயமாக்கல், எழுத்தறிவு, ஊடகப் பயன்பாடு, அரசியல் சார்ந்த விழிப்பு போன்றவற்றை ஏற்படுத்த முடியும் எனக் குறிப்பிடுகிறார்.

ஆக அபிவிருத்திச் செயற்பாட்டில் தற்போதைய நிலையில் இருந்து மேலும் சிறப்பான நிலை ஒன்றை அடையக் கூடிய வகையில் ஊடகப் பயன்பாட்டை மேற்கொள்ளல் அபிவிருத்தி சார் தொடர்பியலின் செயற்பாடாக அமைகின்றது.

O - கவனி, R - பிரதிபலி, A - ஆய்வு செய்து மேம்படுத்தல், C - கருத்துருவாக்கம், L - கற்றுக்கொள், E - அறிக்கையிடல் ஊடாக பணியை ஓரக்கிள் என்ற எண்ணக்கரு (Oracle) விளக்கி நிற்கின்றது.

அபிவிருத்தி என்பது தனிநபர் ஒவ்வொருவரதும் சமூக, பொருளாதார, கலாசார துறைகள் சார்ந்த வளர்ச்சியினை இவ் எண்ணக்கருக்கள் குறித்து நிற்கின்றது. தனிநபர் என்ற கட்டுருவில் தொடர்பு என்ற இணைப்பு வலுவானதுபொருளாதார, சமூக, செயற்பாடு இயக்கம் பெற தொடர்பு முறைகள் அடிப்படையானவை. யுனஸ்கோ, ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியும் உண்டாதல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. சமூக அபிவிருத்தியானது உணவு, போசனை, சுகாதாரம், கல்வி, வீடு, சமூக பாதுகாப்பு, ஆடையணிகள், ஓய்வு, மனித சுதந்திரம் ஆகிய துறைகளில் ஏற்படுத்தபட வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

தொடர்பியலும் அதனோடு இணைந்த கருவிகள் இத்துறைசார் விடயங்களை நிகழ்ச்சித் திட்ட உள்ளடக்கமாக கொண்டு தகவல் மற்றும் தொடர்பு நிகழ்ச்சிகளை திட்டமிட்டு வெளியீடு செய்து வருவதை தொடர்பியலில் அவதானிக்க முடியும்.

உலகளாவிய ரீதியில் அபிவிருத்தி செயற்பரிமாணத்தை அளத்தல் என்பது அபிவிருத்தி மட்டத்தையும் மாற்றத்தையும் இனங்கண்டு கொள்ள உதவுகின்றது. இவற்றை மரபு வழி அளவீடுகள், நவீன அளவீடுகள் என இரு வகைப்பாட்டில் உள்ளடக்கிக் கொள்ள முடியும். பொருளாதாரசார் அபிவிருத்தி அளவீட்டு முறைகள் மரபு வழி அளவீடுகள் என்றும் சமூக அபிவிருத்தியை அளவிடுதல் நவீன அளவீடுகள் என்றும் கொள்ளப்படுகிறது. சமூக அபிவிருத்தி அளவீட்டினுள் பொது வசதிகள் தொடர்பான அளவீட்டில் தொடர்புசார் கருவிகளின் அளவுப் பரிமாணம் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. தனிநபர் சக்தி நுகர்வு சனத்தொகையில் 1000 பேர்களிடம் உள்ள வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைபேசி எண்ணிக்கை என கணிப்பிடப்பட்டு அபிவிருத்தி மட்டம் அளவீடு செய்யப்படுகின்றது.

அட்டவணை - 03

நாடுகள்	தொலைபேசி மக்கள் (1000 பேருக்கு)	தொலைக்காட்சி மக்கள் 1000 பேருக்கு	இன்ரநெற் 1000 பேருக்கு
பிரித்தானியா	1.9	2.3	42
யப்பான்	1.5	1.6	45
ஐக்கியராச்சியம்	1.3	1.2	55
சிங்கப்பூர்	2.0	2.6	50
இலங்கை	88.1	10.2	01
இந்தோனோசியா	70.8	9.1	04
இந்தியா	93.5	23.6	02
பாகிஸ்தான்	68.5	47.7	01
நெதர்லாந்து	-	-	51
நோர்வே	-	-	50
சுவீடன்	-	-	57

(மூலம் :- யுனிசெவ் அறிக்கை - 2005)

அட்டவணை - 04

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பிள்ளைகளுக்கு மறுக்கப்படும் அடிப்படை தேவை மற்றும் உரிமை.



மூலம் : (The Policy press Bristol, UK - Oct - 2003)

மேற்காட்டப்பட்ட அட்டவணைகள் 03, 04 ன் மூலம் தொடர்புசாதன பயன்பாட்டைக் கொண்டு அபிவிருத்தி மட்ட அளவீடுகள் மேற்கொள்ளப்படுவதை சுட்டிக்காட்ட முடியும். இதன் மூலம் அபிவிருத்தியில் தொடர்பு துறையின் வகிபங்கை உணரக்கூடியதாக உள்ளது. அபிவிருத்தி செயலுக்கு அடிப்படையாக அமைவது அறிவு ஆகும். அறிவு விருத்தியில் மேம்பாடு ஏற்படும் பொழுது அபிவிருத்தியும் அபிவிருத்தி செயற்பாடுகளும் விரிவுபெறும். தொடர்பு சாதனம் ஊடாக அறிவு விருத்தி முயற்சிகள் மற்றும் அவற்றிற்கான பிரயோகங்கள் ஊடகங்கள் மூலம் இடம் பெறும். சகலருக்கும் சமத்துவமான கல்வி என்ற அடிப்படை கொள்கையிலும் தேசிய அபிவிருத்திக்கான கல்வியை உத்தரவாதப்படுதுவதிலும் முனைப்புக் காட்டவேண்டும். இதற்கேற்ப அறிவு வெளியீட்டுக்கும் தொடர்புக் கருவிக்கும் இடையில் மேலும் இணைப்பை ஏற்படுத்துதல் அவசியமாகிறது.

தொடர்பு சாதனங்கள் ஊடாக அறிவு அதாவது கல்விச் செயற்பாட்டை முறைசார் வகையிலும் சமூக அபிவிருத்தி நோக்கிலும் முன்னெடுக்க முடியும். வாழ்க்கை நீடித்த கல்வி, தொடருரு கல்வி போன்ற எண்ணக்கருக்களின் பிரயோகக் கருவியாக ஊடகம் அமைய முடியும். கற்றல் கற்பித்தலில் சமத்துவம் வழியை விளைவித்தல், மாறிவரும் கல்வி செயல்முறை பற்றிய ஆராய்வு மற்றும் சமூக அபிவிருத்திசார் அணுகு-முறைகளை அறிய இவற்றை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

தொடர்பு சாதனங்கள் குறித்த தெளிவு மக்களிடையே ஊக்கப்படுத்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல், அறிவித்தல், அறிவுறுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றன. எத்தனை எவ்வளவு விடயங்களை அறிவிக்கின்றோம் என்பதைவிட எவ்வளவு தூரம் அத்திட்டம் அல்லது தகவல் தொடர்பாக சிந்திக்க வைக்கிறோம் அதனை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறோம் என்பதே முக்கியம்.

அபிவிருத்தி தொடர்பியல் மேலும் இரு முக்கிய அம்சங்-களைக் கொண்டது.

1. ஒரு பொதுவான புரிந்துணர்வுக்கு ஏற்ற வகையில் தகவலை விளக்குதல்.
2. அத்தகவலை சரியென்றாக்குதலும் அதன் படி ஒழுக வைத்தலும்.

மக்கள் புதுக்கருத்தை அவதானிப்பதன் மூலம் உள்வாங்கிக் கொள்வதாக பொதுவாக கூறப்படுகின்றது. ஒருவர் புதுக்கருத்தை தமது மூளையமைப்பில உள்வாங்கிக் கொள்கிறார்கள் செயற்பாடுகள் பின்வரும் படிமுறையில் இடம் பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது.

விழிப்புணர்வு
விருப்பம்
மதிப்பிடல்
முயன்று பார்த்தல்
உள்வாங்குதல்

இத்தகைய அடிப்படையிலேயே தனி மனிதன், சமூக தொகுதியிடம் புதிய தகவல் சென்றடைவதாகவோ அல்லது ஏற்றுக் கொள்ளப்படுவதாகவோ அமைகிறது. இவற்றில் சிலர் தாமாகவே முன்வந்து சில விடயங்களை ஏற்றுக் கொள்ளல், சிலர் எதையுமே ஏற்றுக் கொள்ளா திருத்தல் போன்ற இயல்புகளை அவதானிக்க முடியும். இவை அபிவிருத்தி செயல் ஒழுங்கின் மைய விசையுடன் ஏதோ ஒரு வகையில் இணைவு பட்டதாகவே அமைகின்றது.

தொடர்பியல் முறைகள் அல்லது சாதனங்கள் மூலம் மக்களிடையே குறித்த அபிவிருத்தி செயற்பாடு பற்றிய திட்டங்கள், அவைபற்றிய கருத்துக்களை எடுத்துக்கூறி விளக்குதல், அவற்றின் அவசியம் பற்றிக் கூறுதல் என பணிநிலைகள் விரிவடைகின்றது. மக்களுக்கு அறிவுறுத்தி ஊக்கப்படுத்தல், மாற்றங்கள் மற்றும் சாதகபாதக நிலைகளை அறிவித்தல் சமுதாய, தேசிய மட்டப் பிரச்சினைகளை ஆராய தளம் அமைத்தல், திறன் சார்ந்த அறிவுரை வழங்குதல், சமுதாயப் பார்வை மற்றும் வழிப்புணர்வை உருவாக்குதல் என இவை அமைகிறது. அபிவிருத்தி தொடர்பான தகவல் பரிமாற்றம் செய்வதன் மூலம் நல்ல முடிவுகளை எடுக்கவோ அல்லது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தவோ பயன்படும். இதன் எண்ணப் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தவோ, மனித விழுமியங்களை ஆழமாக திருத்தவோ உதவும். நல்ல முடிவு எடுப்பதற்கு தொடர்புத் துறை சிறந்த தொடர்பாளராக விளங்குகின்றது. கருத்தை ஆழப்படுத்தல், பரப்புதல் என பணிகளை மக்களிடையே அபிவிருத்தி இலக்கு நோக்கி முன்னெடுத்துச் செல்ல இவை உதவும்.

குறித்த அபிவிருத்தி தொடர்பான அவசியம், திட்ட வரையறைகள் அவற்றின் பின்னணி ஆகியவற்றை சமூகத்துக்கு விளக்குவதுடன், அபிவிருத்தி பற்றிய இரு பக்க விளைவுகளையும் சமூக நோக்குடன் விபரிப்பதில் தொடர்புத் துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான உண்மைகளை ஆதாரபூர்வமாக வெளியீடுவதிலும் பின்னிற்பதில்லை.

அரசின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் கண்காணிப்பாளராகவும், வழிப்படுத்துநராகவும், ஏற்றத்தாழ்வுகளையும், சமூகப் பிரிவுகளையும் தாண்டி ஊடகம் பொதுமைப்பட்ட வகையில் எல்லோரிடமும் சென்றடையக் கூடிய வாய்ப்பைக் கொண்டு இருப்பது அபிவிருத்திப் பணிக்கு ஊக்கியாக அமையும். ஊடக வழி ஊடாக அபிவிருத்தி செய்ய வேண்டிய விடயங்களை வெளிச்சம் போட்டுக் காட்ட முடியும். மக்கள் தேவைக்கான செயற்பாடுகளை முன்னெடுத்து குறித்த தரப்புடனும் தொடர்புபட்டவர்களுக்கு அறிவுறுத்தல்களை நேரடியாகவும் மறை முகமாகவும் வழங்க முடியும்.

இன்று ஊடகங்கள் அபிவிருத்திக்கும், கல்விக்கும் உதவும் கருவிகளாக செல்வாக்குப் பெற்று வருகிறது. நாட்டின் அபிவிருத்திக் குறிகாட்டிகளில் வெகுஜன தொடர்பு சாதனப் பயன்பாடும், அவை சார்ந்த கல்வி நடவடிக்கைகளும் வலுவுடையதாகி வருகிறன. பூகோள கிராம தொடர்பு நிலைகள் தொடர்பு சாதன பயன்பாட்டால் அதியுயர் நிலை பெற்று வருகின்றன. ஊடக நோக்குகளின் உறுதிப்பாடான செயல் நிலைகளாக கல்வி அபிவிருத்தி வாய்ப்புகளுக்கான அதிக முன்னிலைப்படுத்தல்கள் பெருகி வருவதை அவதானிக்க முடிகிறது. இதனை அபிவிருத்தித் தொடர்பியல் என சிறப்பாக ஊடகத் துறையில் நாம் குறிப்பிட முடியும்.

2009 ஆண்டில் அரசாங்க ஊழியர்கள், இராணுவப் படையினர், ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்கான சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படும் திகதிகள் திறைசேரியினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

சம்பளக் கொடுப்பனவுகள் வழங்குவது தொடர்பாக திறைசேரியின் பணிப்பாளர் நாயகம் ஆர்.டி.சில்வாவினால் வெளியிடப்பட்டுள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆசிரியர்களுக்கான சம்பளம்	ஓய்வூதியக் கொடுப்பனவு
ஜனவரி - 20 செவ்வாய்க்கிழமை	ஜனவரி - 13 வியாழக்கிழமை
பெப்ரவரி - 20 வெள்ளிக்கிழமை	பெப்ரவரி - 12 வியாழக்கிழமை
மார்ச் - 20 வெள்ளிக்கிழமை	மார்ச் - 12 வியாழக்கிழமை
ஏப்ரல் - 08 புதன்கிழமை	ஏப்ரல் - 13 புதன்கிழமை
மே - 20 புதன் கிழமை	மே - 08 புதன்கிழமை
ஜூன் - 19 வெள்ளிக்கிழமை	ஜூன் - 11 வியாழக்கிழமை
ஜூலை - 20 திங்கட்கிழமை	ஜூலை - 09 வியாழக்கிழமை
ஓகஸ்ட் - 20 வியாழக்கிழமை	ஓகஸ்ட் - 12 புதன்கிழமை
செப்டம்பர் - 18 வெள்ளிக்கிழமை	செப்டம்பர் - 10 வியாழக்கிழமை
ஒக்டோபர் - 20 செவ்வாய்க்கிழமை	ஒக்டோபர் - 07 புதன்கிழமை
நவம்பர் - 20 வெள்ளிக்கிழமை	நவம்பர் - 11 புதன்கிழமை
டிசம்பர் - 18 வெள்ளிக்கிழமை	டிசம்பர் - 10 வியாழக்கிழமை.

பொன். தெய்வேந்திரன்,
ஓய்வு பெற்ற அதிபர்.

அனுபவப் பகிர்வு

எந்த ஒரு மொழியாயினும் கற்கும் திறனை வளர்த்தலில் சில படிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுமுள்ளது. ஒரு மொழியில் கற்கும் போது கேட்டல், பேசுதல், எழுதல், வாசிப்பு என்பன கடைப்பிடிக்கப்படுகின்றது.

கற்கும் மாணவர் கவனத்திற்கு

"கற்க கசடு அற" என்பது மறை மொழி, அறிவுத் தேடலுக்கு கல்வி அவசியம். வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டும் என்பர் தத்துவ ஞானிகள். இல் வாழ்க்கையில் எமக்குத் தேவைப்படுவது ஏராளம். சுகவாழ்வையே அனைவரும் வேண்டுவர். இதனைக் கல்வியாலேயே பெறமுடியும். சீரான கல்வி நேரான அறிவை வளர்க்க உதவும். அறியாமை அகல அகல நல்லறிவு வெளிப்படும் தொழிற்படும். இது எத் துறைக்கும் பொருந்துவதாய் அமைகின்றது. 'தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு' என்பதும் இதுவே. இதை எண்ணிய வள்ளுவர் அறிவுடையவர் எல்லாம் உடையார் என்று மேலும் கூறிவைத்தார். எனவே பள்ளி மாணவர் முதல் பல்கலைக்கழகம் மாத்திரமன்றி அதற்கு அப்பாலும் கற்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஆய்வாளர்கள் அறிவைப் பெருக்குவது போன்று பழையன கழிதலும் புதியன புகுதலுக்கும், நிந்தனையற்ற சிந்தனைக்கும் இது உதவும்.

உணவு உட்கொள்ளவும் உற்சாகமாக இருப்பதையே சகல ஜீவராசிகளும் விரும்புகின்றன. ஆனால் தொல்காப்பியக் கூற்றுப்படி ஆறறிவு படைத்த மனிதனே சிந்திக்க முற்படுகின்றான். இதுவே அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். அறிவைத்தேடி சிறந்த பிரஜையாக வாழ்வதே மனிதனுக்குத் தேவையாகின்றது. கற்றலாலே இதைப் பெறமுடியும் என்பதை ஒவ்வொரு மாணவரும் திண்ணமாக நெஞ்சில் பதித்து வைத்தால் இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

எந்த ஒரு மொழியாயினும் கற்கும் திறனை வளர்த்தலில் சில படிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுமுள்ளது. ஒரு மொழியில் கற்கும் போது கேட்டல், பேசுதல், எழுதல், வாசிப்பு என்பன கடைப்பிடிக்கப்படுகின்றது. வகுப்பறைக் கல்வியில் மொழித் தொடர்பாடல் மிக முக்கிய இடம் பெறுகின்றது. மாணவர்களின் தரத்திற்கு ஆசிரியர் இறங்கி மாணவர் மேல், கற்றல் வெற்றியளிக்க வேண்டும் என இரங்கிக் கற்பித்தல் இன்றியமையாதது. தூண்டலும் துலங்கலும், தேடலும் தேடியவற்றைப் பிரயோகிக்கவும் வழிகாட்டல் வேண்டும். மாணவர் விருப்பம் பெருகும் வழி ஏற்பட வேண்டும். கற்பிப்பவர் உற்சாகமே கற்றலை மேம்படுத்தும்.

கற்கும் மாணவர்க்கு புலனடக்கம் அவசியம். கூர்மையுடன் கேட்டல் அவதானித்தல், அதையே மீண்டும் பேசிப் பதிவு செய்தல், வாசித்து அறிந்து கொள்ளுதல், எழுத்தில் பதிவு செய்தல். கற்க கற்க உங்கள் இலக்கு என்ன என்பதைத் திடமாக்கிக் கொள்ளுதல் வேண்டும். வேகமும் விவேகமும்

தேவை. எதையும் பிற்போடாமல் அன்று அன்றே பாடத்தெளிவை உள்வாங்கும் பயிற்சி மிகத் தேவை.

பாரதத்தில் ஒரு கதை

துரோணர் விற்பயிற்சியில் மாணவர்கள் மதி நலத்தைச் சோதிக்க எண்ணி துரியோதனன், தருமர் முதலியோரை வரிசையில் நிற்க வைத்தார். மாங்காய்கள் நிறைந்த மாமர நிழலில் சகலரும் நிற்கிறார்கள். வலது பக்க நெடிய கிளையில் தொங்கும் மாங்காயை வீழ்த்த வேண்டும் எனப் பணித்தார். சகலரும் தயாரானார்கள். தருமரை அழைத்தார்.

துரோணர் : தருமா கிளை தெரிகிறதா?

தருமர் : ஆம் ஸ்வாமி

துரோணர் : நான் தெரிகிறேனா?

தருமர் : ஆம் ஸ்வாமி!

துரோணர் : கீழே வில்லை வை.

அடுத்து வந்த துரியோதனன் மற்றோரும் இவ்வாறே கேட்டதெல்லாம் தெரிகின்றது என்றனர். ஈற்றில் அர்ச்சுனனை அழைத்தார்.

துரோணர் : அர்ச்சுனா மாங்காய் உள்ள கிளை தெரிகிறதா?

அர்ச்சுனன்: இல்லை ஸ்வாமி!

துரோணர் : நானாதல் தெரிகிறதா?

அர்ச்சுனன்: இல்லை ஸ்வாமி!

துரோணர் : மாங்காயாதல் தெரிகிறதா?

அர்ச்சுனன்: இல்லையே ஸ்வாமி!

மற்றவர்கள் கொல்லென்று சிரித்தனர்.

துரோணர் : கனையை விடு

அம்பை விட்டதும் மாங்காய் வீழ்ந்தது. அர்ச்சுனன் கண்ணுக்கு மாங்காய் தொங்கும் காம்பே தெரிந்தது. மாங்காங் வீழ்ந்தது.

கல்வி கற்க மன ஒருமைப்பாடு வேண்டும் வாய்ப்புக் கிடைக்கும் போது எல்லாம் கற்க வேண்டும். முதுகுத் தண்டு நேராக நிமிந்த நிலையில் இருக்க வேண்டும். நுழையீரல் மடியக் கூடாது. பிராணவாயுவின் தொழிற்பாடு அப்போதுதான் சீராக இயங்கும். நீண்ட நேரம் வீட்டிலும் படிக்ககூடாது. உணவு உறங்கல் படிப்பு என்பதற்கு நேரம் பகிர்ந்து அளிக்கப்படல் வேண்டும். ஓய்வும் வேண்டும். பரீட்சை நேரத்தில் மாத்திரம் நீண்ட நேரம் கண் அயர அயர கற்றல் தவிர்க்க வேண்டும். மீட்டல் அன்றாடம் நிகழ வேண்டும். சகமாணவர் கலந்து உரையாடல் அவசியம். வீட்டுவேலை கிரமமாய் அமைய வேண்டும். உடனுக்குடன் ஆசிரியர் மூலம் தெளிவைப் பெறல் வேண்டும். தேடலில் பல்வேறு வினா விடைக் கிரகித்தற் பயிற்சியும் வேண்டும். கடினபாடத்தை முதலில் முடித்து விட்டுப் பிடித்த பாடங்களை அயர்வு ஏற்படும் போது படிக்கலாம்.

உளவியலாளர் கூற்றுப்படி மறதிக்கான காரணங்களைக் களையுங்கள். • தாழ்வு மனப்பான்மை • மனக்குழப்பம் • சோம்பல் • பயம் • அதிர்ச்சி 6. முயற்சியின்மை • ஆர்வமின்மை • பிறரால் ஊக்கப்படுத்தாமை • நினைவூட்டிக் கொள்ளாமை • உடல் நலக்குறைவு. இவை கற்றல் உற்சாகத்தைக் குறைக்கும் சில காரணிகள். நினைவாற்றல் வரைப்பயிற்சி தேவை. மீண்டும் மனனம் தேவை. அடித்தால் அம்மியும் நகரும்.

உணவுக்கட்டுப்பாட்டில் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். ஆசைப்பட்ட போதெல்லாம் தோசையை சாப்பிடக்கூடாது. எதிலும் அளவு வேண்டும். வயிறு நிறைந்தால் தூக்கம் தான் வரும். பாட மீட்டல் அவசியம் எழுத்தில் பதித்தல் மிக அவசியம். சிந்திக்கவும் வேண்டும்.

உடல், உள்ளம், உயிர் என்ற முக்கூட்டுக் கலவையே மனிதன். இம் மூன்றின் உறுதிக்கு கட்டுபாடு வேண்டும். நுண்கலை ஈடுபாடு, உடற்பயிற்சி என்பன சீரான கற்றலக்கு உறுதுணையாகும். போட்டிகளில் பங்கு பற்றல் வேண்டும். தோல்வியைக் கண்டு மனம் துவளக்கூடாது. Faitures are the Pillers of Success என்று உணர வேண்டும்.

பேசும் போதும் வாசிக்கும் போ-தும் உச்சரிப்பு கவனித்தல் மிக அவசியம். 'ள' 'ழ' 'ல' என்ற எழுத்துகளில் உச்சரிப்பு குறைபாடு அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வெழுத்துகள் வரும் சொற்களின் உச்சரிப்புகளில் அதிக கவனம் தேவை. எதையும் வாசித்து கிரகிக்கும் போது கவனிக்க பல வழிகளை கல்வியியலாளர்கள் காட்டியுள்ளனர். நினைவில் நிற்க: •பதிவு செய்தல் (Recording) • முக்கிய குறிப்பை நினைவில் பதித்தல் (Recognization) • மீண்டும் நினைத்துப் பதித்தல் (Recalling) • மன ஒய்வு கொடுத்து பிற செயலில் ஈடுபட்டபின் படித்தல் (Relax) • இடைவெளிக்கு முன்விட்ட இடத்தை தொடரல். (Retention) • முழுப்பகுதியையும் படித்தல். (Review) • படித்த அத்தனையும் எழுத்தில் பதித்தல் (Writing) இவையாவும் நினைவில் நிற்க உதவும்.

வீடு, பாடசாலை, சமூகஸ்தாபனங்கள் ஆகிய மூன்றும் கற்றலுக்கு ஒரு மாணவனை இட்டுச் செல்கின்றன. பெற்றோர்கள் அன்பான கண்டிப்புடன், தேடலை ஊக்குவித்து, வற்புறுத்தலின்றி பிள்ளைகளை கற்றலில் வழிநடத்த வேண்டும். கற்பிக்கும் ஆசிரியருக்கே கற்றல் திறன் வளர்த்தலில் முக்கிய பங்கு உண்டு. அலுப்பு ஏற்படாதவாறு பாடத்தைச் சுவை படக் கற்பிக்க வேண்டும். கற்கும் மாணவனுக்கு ஆசிரியரில் வெறுப்பு ஏற்படின் அப்பாடத்தையே துறக்கும் நிலை ஏற்படும்.

எனவே கற்கும் மாணவர் மனதைத் தூண்டும் வழி காட்டியாகவே ஆசிரியர் அமைதல் வேண்டும். ஆசிரிய மாணவ தொடர்பாடல் சுமுகமெனில் கற்றலும் சுகமே. எனவே கற்கும் மாணவர்கள் எதிர்கால இலக்கை மனதில் நிறுத்தி, வேண்டத்தகாதவற்றை நீக்கி கற்றலில் ஊக்கம் கொண்டால் எதிர்காலத்தில் பல ஆக்கப் பணிகளைச் செய்ய வழி காட்டும். இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள் எனவே வாழக் கல்மின். கல்வி கருந்தனம்.



கு. கமலகுமார்,
ஆசிரிய கல்வியியலாளர்,
வ.தே.க.கல்லூரி, வவுனியா.

ஆசிரியம்

இலங்கையில் ஆசிரியர் தொடர்பான எண்ணக்கரு ஆரம்ப காலம் தொட்டே ஏற்பட்டு வந்துள்ளது. அது மட்டுமன்றி சாதிமுறை, கௌரவம், சமூகத்தில் முதல் மதிப்பு, தெய்வத்தில் இரண்டாம் நிலை என்றவாறெல்லாம் போற்றப்பட்டு வந்தது.

ஆசிரியர் சேவைக்கான மாற்றங்களின் தேவைகள்

இலங்கையில் ஆசிரியர் தொடர்பான எண்ணக்கரு ஆரம்ப காலம் தொட்டே ஏற்பட்டு வந்துள்ளது. அது மட்டுமன்றி சாதிமுறை, கௌரவம், சமூகத்தில் முதல் மதிப்பு, தெய்வத்தில் இரண்டாம் நிலை என்றவாறெல்லாம் போற்றப்பட்டு வந்தது. ஆயினும் அன்னியனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருந்த போது அது மதப்பேரசர்கள், அவர்களிடம் பயிற்சி பெற்றவர்கள் என்றவாறாக விரிவடைந்து சமூகத்தில் பல்வேறு தரப்பினருக்கு வாய்ப்பு வளர்ந்துவந்தது. ஆயினும் முறையான பயிற்சி, சம்பளக் கொள்கை என்பன பின்பற்றப்படவில்லை. மேலும் ஆங்கில மூலம், கிறிஸ்தவம் என்பனவும் செல்வாக்கு செலுத்தியது. இருப்பினும் சுதேச செல்வாக்கும் முற்று முழுதாக குறைந்தது எனக் குறிப்பிட முடியாது. ஆயினும் 1972ல் கல்வி அமைச்சராக இருந்து முகமட் பதூர்தின் அவர்கள் இதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். அதாவது சம்பளச் சம அறிவை தரங்களுக்கிடையிலான சம நிலை ஏற்படுத்தப்பட்டது. இதனால் பல புதிய ஆசிரியர்கள் உருவாகும் வாய்ப்பு உருவானது.

இலங்கை சிறிய நாடாக இருப்பதும் இனத் துவேசம் மேலோங்கி இருப்பதும் அவ்வப்போது அதன் சுயரூபம் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அது மட்டுமன்றி இலங்கையின் பல துறைகளும் அரசியலுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருப்பதும் அதில் மாற்றங்கள் நிகழும் போது ஏனைய துறைகளில் மாற்றங்களும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இந்த வகையில் ஒவ்வொரு அரசாங்கமும் ஆட்சிக்கு வரும் போது தமது கொள்கை, முன்மொழிவுகளை அதனுள் புகுத்தி விடுகின்றது. இவ்வாறாக 1994ம் ஆண்டின் ஆட்சிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னனி ஆசிரியர்களைக் கௌரவித்தல், ஒரு நிலைப்படுத்தல் முறையான திட்டமிடல் என்பவற்றை ஏற்படுத்த ஒரு நுட்பத்தை அறிமுகப்படுத்தினார். அதாவது உலக ஆசிரியர் தினம் October 6ம் திகதி கொண்டாடப்படுவதால் அதை இலங்கையிலும் வெளிப்படுத்த October 5ம்திகதி கொண்டு வரப்பட்டது.

இதற்கு இலங்கை ஆசிரியர் சேவை (Srilanka Teachers Service - SLTS) எனப் பெயர் இடப்பட்டது. இது வரலாற்றின் முதல் மட்டுமல்ல வரலாற்றின் புரட்சிகரமான நிகழ்வும் கூட. இலங்கையில் பல்வேறு வகையாக காணப்பட்ட அனைத்து

ஆசிரியர்களையும் ஒரு நிலையில் உள்வாங்கப்பட்டு அவற்றை ஐந்து பிரிவினுள் அடங்கிக் காணப்பட்டது. இதைச் சிறப்பாக,

SLTS - 1	SLTS - 3 - I
SLTS - 2 - I	SLTS - 3 - II
SLTS - 2 - II	

என்றவாறாக காட்டப்பட்டது. இங்கு 6-10-1994க்கு முன் நியமனம் பெற்றவர்கள் தமது தரம் சேவைக்கு ஏற்ப ஒவ்வொரு பிரிவிலும் அடக்கப்பட்டனர். ஆயினும் அதன் பின்னர் நியமனம் பெறுபவர்கள் SLTS - 3 இன் உள்ளே நியமிக்கப்பட்டனர். அவர்களின் பயிற்சி தரத்திற்கு ஏற்ப படி நிலையில் நியமிக்கப்பட்டனர். மேலும் அவர்களின் பதவி உயர்வு புள்ளி அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டது. அவையாவன.

SLTS - 1	- 5 புள்ளிகள்
SLTS - 2 - I	- 10 புள்ளிகள்
SLTS - 2 - II	- 5 புள்ளிகள்
SLTS - 3 - I	
SLTS - 3 - II	- 10 புள்ளிகள்

என்றவாறாக அமைவதும் புள்ளிகள் வழங்கப்படுவதும்.

01. பயிற்சி அல்லது பட்டம் பெற்றவரின் சேவைக்கு (ஒரு வருடம்) - 01 புள்ளிகள்.

02. பட்டத்தில் கீழ் வகுப்பு (Lawer Class)க்கு - 2 புள்ளிகள், உயர் வகுப்பு (upper closs) க்கு 3 புள்ளிகள் வழங்கப்படும்.

03. பயிற்சிக்கு முன் வருட சேவைக்கு - 1/2 புள்ளிகள்

04. கல்வி மாணிப்பட்டம் (B.Ed or பட்டம் பின்னான கல்வி டிப்ளோமா CP.G.D. Edu) பட்டம் பெறும் போது மேலதிகமாக ஒரு புள்ளி.

05. மேற்படி B.Ed or PGD Edu பெறும் போது புள்ளி பார்க்காமல் SLTS - 2 - II க்கு உள்வாங்கல்.

06. பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் பட்டதாரியாகும் போது அவருக்கு அத்திறமையில் SLTS - 2 - II க்கு நியமிக்கப்படல்.

07. ஆசிரியர் முன் பயிற்சியின் போது புள்ளி வழங்கப்படாமை.

போன்றவாறு அமைக்கப்பட்டு இருக்கின்றது. மேலும் ஒரு திட்டம் என்பதை கொண்டு வரும் போது மிக தெளிவாக பயனுள்ள வகையில் நீண்ட கால நோக்கில் அமைக்கப்பட வேண்டும். அது மட்டுமன்றி அதன் அடிப்படை அம்சங்கள் மாற்றத்திற்கு உள்ளாகாமல் இருப்பதே அதற்கு சிறப்பாக இருக்கும். உதாரணமாக இலங்கையின் அரசியல் யாப்பை மாற்றுவதாயின்

அதற்கு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை தேவைப்படும். இல்லாவிடில் அது இயலாத காரியம் ஆகிவிடுகின்றது.

எனவே இதைப்போல் அடிப்படையில் மாற்றங்கள் என்பதை ஏற்படுத்தாது அவற்றை வைத்துக் கொண்டு விடைகாணல் என்பது அவசியமாகின்றது. மேலும் இதன் பெரும் குறைபாடாக இருப்பது பதவி உயர்வுகளை சுற்று நிருபங்களில் மூலம் வழங்குவது ஆகும். ஏனெனில் பதவி உயர்வு என்பது பொருத்தமான காலத்தில் தானாகவே இடம்பெற வேண்டும். இதனால் எழுதுவினைஞர், அதிகாரிகளின் சேவையும் சீராக வழங்குவதுடன், அரசின் பணச் செலவும் ஒரு முறைசார்ந்த வகையில் அமையும். ஆனால் ஒரு சுற்று நிருபம் மூலம் செயற்படுத்துவதால் எல்லோருக்கும் இடைஞ்சலாக அமைவதுடன் அக்காலத்தில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கும் இடைஞ்சலான நிலை உருவாகின்றது. எனவே அவற்றின் கட்டுக்களைத் தளர்த்தி திறந்துவிடல் வேண்டும்.

ஆசிரிய சேவை அறிமுகமாகியது மிகச் சிறப்பானதே. ஆயினும் அவை ஆசிரியத் தொழிலான கற்றல் கற்பித்தலை மேம்படுத்தவும் அதனூடானான ஆசிரியரின் தர விருத்தியையும் ஏற்படுத்துவதாக அமைவதே அதன் வெற்றிக்கு வழி வகுக்கும். இதைக் கருத்தில் கொண்டு சில முன் மொழிவுகள் பற்றி நோக்கலாம்.

- புள்ளித் திட்டம்
- சேவைக் காலம்

புள்ளித் திட்டம்:- புள்ளித்திட்டம் கல்வித்தகமை வருடசேவை என்பவற்றைக் கருத்தில் கொண்டு வழங்கப்படுகின்றது. ஆயினும் இலகு தகமைக்கான புள்ளித்திட்டம என்பது,

- பயிற்சி பெற்றவருக்கு அதற்காக 1 புள்ளி
- பட்டம் பெறுவதற்கு அதற்காக 2 புள்ளிகள்
- கல்வி முதுமாணி அல்லது பட்டப்பின் கல்வி டிப்பேளாமாவுக்கு - 3 புள்ளிகள்

- கல்வி முதுமாணிக்கு - 4 புள்ளிகள்
- கல்வி முதுமாணி தவிர்ந்த ஏனைய முது மானிக்கு - 3 புள்ளிகள்

என்றவாறாக ஒவ்வொன்றையும் பெறும் போது வழங்கப்படல் வேண்டும். இதனால் ஏற்ற நிலையில் இருந்தவர்களும் இதைப் பெற்றாலும் அதில் அவருக்கு அதை வழங்க முடியும். இதனால் புதியதேடல், கற்றல் என்பன உருவாக்கமுடியும். அத்துடன் உயர் கல்விக்கான கேள்வி உயர்வடையும் அத்துடன் தொழில் நுட்ப டிப்ளோமா, கணினி சார் கல்விகளும் இதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.

சேவைக்காலம்:-

சேவைக்காலம் என்பதில் குறிப்பிட விரும்புவது அவர்கள் பாடசாலையில் சேவை செய்பவரையே குறிக்கின்றது. ஆயினும் அவர்களின் பணி சிறப்பாக இடம் பெற அவர்களின் தேவை உந்துதல் பயன்பாடு என்பவற்றை மேம்படுத்துவதற்காக அமையும் போதே வெளியீடுகளும் சிறப்பாக அமையும். அது மட்டுமன்றி தொழில் நிலையங்களிலும் ஒரு ரம்மியமான சூழல் உருவாகும். இதைக் கருத்தில் கொண்டு தமது தர மேம்பாட்டை ஆசிரியர்கள் மேம்படுத்த அதற்கான கால அளவாக ஒவ்வொரு பயிற்சி அல்லது பட்டத்திற்கான கால அளவாக சராசரி 3 வருடங்கள் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு அமையாதவிடத்து அத்தகமைகள் அக்காலத்தை கருத்தில் கொண்டே பதவி உயர்வுகள் வழங்கப்படல் வேண்டும். அதாவது,

பயிற்சியின் பின் பட்டத்திற்கு 3 வருடம்.

பட்டத்தின் பின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக்கு 3 வருடம்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது கல்வியின் முதுமானிக் கற்கையின் பின் 3 வருடம். அதன்பின் கல்வியின் முது மாணியை தொடரலாம்.

என்றவாறான அமையும் போது தொடர்ந்து ஆசிரியர்கள் தமது தர உயர்ச்சியில் மட்டும் ஈடுபடாது இருப்பதும் இதை அடிப்படையாகக் கொண்டு அதற்காக விடுமுறை, சம்பளம் வழங்குவதால் ஒருமுகப்படுத்தும் செயல் முறை உருவாகும் வாய்ப்பு ஏற்படும் என்பது திண்ணம்.

இலங்கை ஆசிரிய சேவை அறிமுகமாகியது ஒரு வரலாற்று மைல் கல்லே. ஆயினும் அதன் ஊடாக தரமான ஆசிரியர், சேவை என்பதை பெறப்படுவதும்



நல்ல பெறுபேறு அல்லது விளைவை பெறத்தக்கதாக அமைய வேண்டும். அத்துடன் அடிப்படையை மாற்றுவது சில தரப்பினரை பற்றியதாக அமையலாம். எனவே அவற்றை கருத்தில் கொண்டு பொதுவான மாற்றங்கள், அதன் துறையைப் பாதிக்காது அதன் துறை சார்ந்தவர்களின் ஆலோசனை முன் மொழிவுகளைப் பெற்று செயற்படுத்துவதே சிறந்தது. அத்துடன் அவை தொடர்பில் அல்லது சேவை செய்பவர்களை பாதிக்காது தூண்டுபவராக அமைய வேண்டும். ஏனெனில் திருத்தங்கள் கொண்டு வர பிரச்சினைகளும் அதிகமாகக் கூடாது. மாறாக அவை குறைவடைந்து அல்லது இல்லாமல் போக வேண்டும். அது ஒரு குறிப்பிட்ட காலத்திலாவது இருக்க வேண்டும்.

மேலும் ஏனைய தொழில்கள் போல் அல்ல ஆசிரியத் தொழில் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

உதாணமாக ஒரு மேலதிகாரி அல்லது எழுது வினைஞர் அந்த வேலை முடிந்தவுடன் அதைப் பற்றி எண்ணம் தேவையில்லை. மறுபடி தொழிலுக்கு சென்ற பின் சிந்திக்கலாம். ஆனால் ஆசிரியர் 6 மணித்தியாலம் வேலை செய்வாராயினும் அவர் முன் ஆயத்தம், அதை பற்றிய முன் யோசனை திட்டமிடல் என்பனவும் நிகழ்வு முடிந்த பின் விளைவு மதிப்பீடு என்றவாறு வரையறையற்று தொழில் செல்கின்றது. இதனால் உடல் மட்டுமல்ல உள்ளமும் நெருக்கடிக்கு உள்ளாகின்றது. எனவே அவர்களை ஏனைய தொழில்களுடன் ஒப்பிடாது சுமுகமான கவின் நிலையுடன் பணியாற்றும் வாய்ப்பை உருவாக்குவது எமது கடமையல்லவா?



த.கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சீர்மியம்

பொதுவான கல்வி அமைப்பியலினூடாக மாணவர்களின் பிரச்சினைகளுக்கு ஆசிரியர் உதவமுடியும் என்ற நம்பிக்கை நீடித்து வந்தது. ஆயினும் பொதுவான கல்வி அமைப்பும், அதனோடிணைந்த கலைத்திட்டமும் இன்றை மாணவர்களின் தனித்துவமான பிரச்சினைகளுக்கு வழிசொல்ல முடியாதனவாக உள்ளன.

கல்விச் சீர்மியமும் பன்முக நுண்மதியும்

மனிதன் வாழும் உலகு இன்று சிக்கல் நிறைந்ததாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு மாணவர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளனர். பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியவராக உள்ளனர். இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் தாமாகவே தீர்மானம் எடுக்கும் ஆற்றல் எல்லா மாணவரிடத்தும் இருப்பதாகக் கூறமுடியாது. இச்சந்தர்ப்பங்களில் மாணவருக்கு உதவ வேண்டிய கடப்பாடு ஆசிரியர்களுக்கு உண்டு.

பொதுவான கல்வி அமைப்பியலினூடாக மாணவர்களின் பிரச்சினைகளுக்கு ஆசிரியர் உதவமுடியும் என்ற நம்பிக்கை நீடித்து வந்தது. ஆயினும் பொதுவான கல்வி அமைப்பும், அதனோடிணைந்த கலைத்திட்டமும் இன்றைய மாணவர்களின் தனித்துவமான பிரச்சினைகளுக்கு வழிசொல்ல முடியாதனவாக உள்ளன. பல்வேறு சந்தர்ப்பங்களிலே மாணவர்களின் தனித்துவங்கள் கவனத்திற்கொள்ளப்படாமையால், மாணவர்களிடத்தே உள முரண்பாடுகளும் உளநெருக்கடிகளும் முளைவிடத் தொடங்குகின்றன. இவற்றின் விளைவாக நடத்தைப் பிறழ்வுகள் ஏற்பட்டு/ சீராக்கப் பிரச்சினைகளாலும் மாணவர்கள் அவதிக்குள்ளாகின்றனர்.

மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகள் காரணமாகவே பொது அமைப்பியலைக் கொண்ட கல்வியினால் அவர்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவேண்டிய மார்க்கங்களை முன்வைக்க முடியாதுள்ளது. மாணவர்களிடத்தே தனியாள் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கக்கூடிய பல்வேறு பின்னணிகளையும் காரணிகளையும் விளங்கிக்கொண்டு, மாணவர்களின் தனித்துவங்களை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான ஊக்கலை வழங்கவேண்டிய அவசியம் இன்று ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே, கல்வி வழிகாட்டல், கல்விச் சீர்மியம் என்பன குறித்த அடிப்படை அறிவும் இவற்றோடிணைந்த திறனாற்றல்களும் ஆசிரியர்களிடத்து விருத்தி செய்யப்பட வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கி, இன்றைய ஆசிரியர் பயிற்சித் திட்டங்களில் அவை உள்ளடக்கப்படுகின்றன.

தனித்துவமான உள்ளார்ந்த ஆற்றல்களுடனும் தேவைகளுடனும் பிரச்சினைகளுடனும் விளங்குகின்ற பிள்ளை ஒவ்வொன்றும் தன் பிரச்சினைகளைத் தனதாக ஏற்றுக்-

கொண்டு அப்பிரச்சினைகளின் தன்மையை விளங்கி, தன்னைப் பற்றிய சுய உணர்வுடன் தன்னைத்தானே நெறிப்படுத்தி, தன்னைச் சுற்றியுள்ள சூழலில், குடும்பம், சகபாடிகள், பாடசாலை, சமூகம், வெகுசன தொடர்புச் சாதனங்கள், சமய நிறுவனங்கள் போன்ற பல்வேறு காரணிகளின் செல்வாக்குகளுக்கும் அப்பால் தனது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியதாக பிள்ளைகளிடத்து ஆற்றலை வளர்த்தலே கல்வி வழிகாட்டலினதும் கல்விச் சீர்மியத்தினதும் அடிப்படை நோக்கமாகும். வாழ்வின் எல்லாப் பருவங்களிலும் சகல சந்தர்பங்களிலும் சூழலுடன் இயைபாக்கம் காணவும் சுயதிறன்களை விருத்தி செய்யவும் பொருத்தமான தெரிவுகளைச் செய்யவும் தீர்மானங்கள் மேற்கொள்ளவும் வேண்டிய ஆற்றல்களை பிள்ளையிடத்து வளர்த்தெடுப்பதென்பது இலகுவான பணியன்று. உளவியல் அணுகுமுறை அடிப்படைப் பயிற்சி பெற்றவர்களாலேயே இதனைச் சிறப்பாகச் செய்து முடிக்க முடியும்.

பிள்ளையின் உடல் நலம் போன்று உளநலமும் சிறப்பாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும். பிள்ளையின் உள சமூக விருத்திக்காகக் கைக்கொள்ளப்படும் வழிமுறைகளும் உபாயங்களும் கூட பொருத்தமானவையாக அமைந்து பிள்ளையின் ஆற்றல்களையும் தனித்துவங்களையும் சிறப்பான முறையிலே வெளிக்கொணரவேண்டும். பிள்ளை ஒவ்வொன்றுமே தனித்துவமானதுதான். அப்பிள்ளைக்கே உரிய சிறப்பான ஆற்றல்கள் வெளிப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் பலவேளைகளில் அப்பிள்ளைக்கும் கிடைக்காமற் போகலாம். பிள்ளையின் ஆற்றல்கள் எனவும் இயல்புகள் எனவும் நாம் ஏற்கனவே செய்து கொண்ட முற்கம்பிதங்களும் கூட இதற்குக் காரணமாகலாம். அவ்வாறான ஒன்றே பிள்ளையின் நுண்மதி (Ingellingence) என்பதாகும்.

நுண்மதி என்பது ஒரு பிள்ளையின் உள ஆற்றலாகும். 'புரிந்து கொள்ளுதல், நியாயம் காணல், புதுமை புனைதல், தொடங்கிய செயலைத் தொடர்ந்து செய்தல், நடத்தைக் குறைபாடுகளைத் தானே உணர்தல், தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றின் ஒட்டுமொத்தப் பெறுமானமே நுண்மதியாகும்' என அல்பிரட் பீனே என்பவர் குறிப்பிட்டார். பின்னர் நுண்மதியை அளவீடு செய்தற்காக 'நுண்மதி 'ஈவு' (I.Q) எனும் பதம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு பிள்ளையின் உளவயதுக்கும் கால வயதுக்குமிடையிலான விகிதத்தை நூறால் பெருக்கிவரும் எண்ணை நுண்மதி ஈவுப் பெறுமானமாகக் குறிப்பிடும் வழக்கு ஏற்பட்டது. ஒரு பிள்ளை சாதாரணமாக ஒரு குறித்த வயதில் (கால வயதில்) ஆற்றக்கூடிய உளச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு பிள்ளையின் உளவயதும் நுண்மதி ஈவும் கணிக்கப்படுகின்றது. ஒரு குறித்த காலவயதில் உள்ள பிள்ளை அக்குறித்த காலவயதுக்கும் உயர்வான அல்லது தாழ்வான வயதுக்குரிய உளச் செயற்பாடுகளை ஆற்றக்கூடியதாக இருக்கலாம். அவ்வாறு எவ்வயதுக்குரிய உளச் செயற்பாடுகளை ஆற்றக்கூடியதாகப் பிள்ளை உள்ளதோ அந்த வயதே அப்பிள்ளையின் உளவயதாகக் கொள்ளப்படுகிறது.

உளவயதைக் கணிப்பிடும் பொருட்டு சோதனைகள் பல கொடுக்கப்படுவது வழக்கம். ஆயினும் மிக நீண்டகாலமாக பிள்ளையின் மொழிவளம், தர்க்க ரீதியான கணிதம் ஆகியவற்றை மாத்திரம் அளவிடுதலே நுண்மதிச் சோதனைகளின் நோக்கமாக இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக பிள்ளைகளின் ஆற்றல்களின் பன்முகப்பாடு (Multiplicity) புறக்கணிக்கப்படுவதை ஹாவார்ட் பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் ஹோவார்ட்காடினர் (Howard Gardner - 1983) எடுத்துக் கூறினார். நுண்மதித் தேர்வுகளின், ஒரு மனிதனுடைய நுண்மதி சார்ந்த ஆற்றல்களில் அளவு கோலாக தனியே மொழிவளம், தர்க்கரீதியான கணிதம் ஆகியவற்றை மாத்திரம் கருத்திற்கொள்ளாது அவனது பல்வேறு புலம் சார்ந்த ஆற்றல்களையும் கவனத்தில் எடுத்து, பரந்த வீச்சினூடாக அளவிடலை மேற்கொள்ள வேண்டுமென காடினர் வலியுறுத்தினர். பரந்தவொரு தொடரிலமைந்த கலாசார விழுமியங்கள் கொண்ட செயல் நடவடிக்கைகளில், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும் உற்பத்திகளைப் படைக்கவும் புதிய அறிவைக் கண்டுபிடிக்கவும் கூடியதான வெவ்வேறு செயன்முறைத் தொழிற்பாடுகள் சார்பாக நுண்மதி என்பது வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டுமென இவர் கூறினார்.

நுண்மதி என்பது ஒன்றோடொன்று இணைந்த ஒரு வளைவுபோன்ற தனியானதொரு உள ஆற்றல் என்ற கருத்தை காடினர் மறுதலித்ததோடு, ஏழு தனித்த நுண்மதிகளையும் இவர் முன்வைத்தார். இந்த முன்வைப்பானது, முன்னைய நுண்மதி அளவீட்டினூடாகப் புறக்கணிக்கப்பட்டவர்களை குறித்த கவனத்தை வேண்டி நிற்பதோடு, அவர்கள் பற்றிய நம்பிக்கைகளையும் வளர்ப்பதாக உள்ளது.

மொழிசார் நுண்மதி, தர்க்கம் சார் கணித நுண்மதி, இசை சார் நுண்மதி, வெளிசார் நுண்மதி, உடல் இயக்கம் சார் நுண்மதி, ஆளிடைத் தொடர்புசார் நுண்மதி, ஆள் அகத் தொடர்புசார் நுண்மதி என அமையும். இந்த ஏழு நுண்மதிகளும் பன்முக நுண்மதிகள் (Multiple Intelligences) என அழைக்கப்படுகின்றன. இப்பன்முக நுண்மதிகள் கொண்டோரிடத்துக் காணப்படக்கூடிய ஆற்றல்களையும் அவர்களை எத்துறையை நோக்கி வழிப்படுத்தலாம் என்பதையும் கார்டினர் கீழே காட்டிய ஓர் அட்டவணையில் தந்துள்ளார்.

கார்டினர் முன்வைத்த பன்முகநுண்மதிக் கோட்பாடானது, மாணவர்களின் பன்முகப்பாடுகளை

நுண்மதி	ஆற்றல்கள்	ஆற்றுப்படுத்தப்படக்கூடிய தொழிற்துறை
மொழிசார் நுண்மதி (Lingustic)	ஒலிகளையும், ஒழுங்கான சந்த நடை -களையும் சொற்களின் கருத்துக்களையும் மொழியின் வெவ்வேறு தொழிற்பாடு -களையும் எளிதிற் கிரகித்தல்.	பத்திரிகைத் துறை, கவிதைத் துறை, எழுத்துத்துறை.
தர்க்கம்சார் கணித நுண்மதி (Logico-mathematical)	தர்க்க ரீதியான கோலங்களையும் எண்சார் கோலங்களையும் கிரகிக் கக்கூடிய ஆற்றலும் கண்டறியக்கூடிய ஆற்றலும்: நீண்ட சங்கிலி போல் அமைந்த தர்க்கத் தொடர்களைக் கையாளக்கூடிய ஆற்றலும்.	கணிதத்துறை, விஞ்ஞானத்துறை
இசைசார் நுண்மதி (Musical)	சுருதி, லயம், அழகியல்சார் ஒலித்தொனிகள் என்பவற்றை உருவாக்கக்கூடிய ஆற்றலும் நயக்கும் ஆற்றலும், சங்கீத வடிவங்களின் வெளிப்பாட்டுத்திறனை விளங்கிக் கொள்ளலும்.	இசையமைப்பு, வயலின் சங்கீதம்.
வெளிசார் நுண்மதி (Spatial)	கட்புல-வெளி உலகப் புலக்காட்சி பெறல்; இப்புலக்காட்சிகளை உருமாற்றம் செய்யக்கூடிய ஆற்றல்; தூண்டிகளற்ற நிலைமையிலேயே இத்தகைய புலக்காட்சி அனுபங்களை மீள் உருவாக்கல்.	சிற்பத்துறை, கள ஆய்வுத்துறை
உடல் இயக்கம்சார் நுண்மதி (Bodily-Kinesthetic)	வெளிப்பாடுகளைக் காட்டுவதற்காக உடலைத் திறனாகப் பயன்படுத்தல், பொருட்களைத் திறனாற்றலுடன் கையாளல்.	நடனத்துறை, விளையாட்டுத்துறை,
ஆளிடைத்தொடர்புசார் நுண்மதி (Interpersonal)	ஏனையோரின் மனநிலைகளையும் சுபாவங்களையும் ஊக்கல்களையும், நோக்கங்களையும் கண்டறியக்கூடிய ஆற்றல்.	விற்பனைத்துறை, சிகிச்சைத்துறை, உளவியற்துறை.
ஆள் அகத்தொடர்புசார் நுண்மதி (Intrapersonal)	தன்னை உணர்தல், தன்னை நெறிப் படுத்தல், தனது மனவெழுச்சியின் இயல்பைப் பொருத்தமாகக் கண்டறிதல்	வழிகாட்டுநர் சீர்மியர்.

இனங்கண்டு, அவர்களின் ஆற்றல்களை மதித்து அவர்களுக்குப் பொருத்தமான துறையில் அவர்களை ஆற்றப்படுத்தலில் உதவக்கூடியது. இதனால் மாண-வர்கள் ஊக்கம் பெற்று, தமது ஆற்றல்களை வளர்க்க முனைவர். இன்று கார்டினர் முன்வைத்த நுண்மதி வகைகள் மேலும் விரிவாக்கம் பெறக்கூடியதான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அகவிழி

கல்வி வட்டம் ஏற்பாட்டில் கலந்துரையாடல

(மட்டக்களப்பு அகவிழி வட்டத்தின் சார்பில் கருத்தாடல் நிகழ்ச்சி 20-01-2009 அன்று மாலை 4.30 க்கு மட்டக்களப்பு கிறீன் கார்டன் கருத்தரங்கு மண்டபத்தில் நடை பெற்றது.)

இந்த நிகழ்ச்சி திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பாக கல்வியியல் பேராசிரியர்கள் சபா ஜெயராசா, சோ.சந்திரசேகரன் ஆகியோர் இந்தக் கருத்தாடலில் கலந்து சிறப்பிக்க இருந்தமையால் குறுகிய கால அழைப்பை ஏற்று கல்வித்துறையைச் சார்ந்தவர்கள் சுமார் 40 பேர் வரையில் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த பேராசிரியர்களுடன் பேராசிரியர் மா.செல்வராஜா, கலாநிதி மா.கருணாநிதி விரிவுரையாளர் அருள்மொழி ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சிக்கு அகவிழி ஆசிரியர் தெ.மதுசூதனன் தலைமை தாங்கினார். சமகாலக் கல்விச் சூழலில் அகவிழியின் வருகை ஆசிரியர் கல்வியில் அகவிழி ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் அகவிழி எதிர் நோக்கும் பிரச்சினைகள் என பல்வேறு அம்சங்களைச் சுட்டிக்காட்டினார். தொடர்ந்து தமிழ்க் கல்விச் சூழலில் கல்வியியல் துறையில் "இரு பேராசிரியர்களின்" முக்கியத்துவம் என்ன என்பது குறித்து மதுசூதனன் எடுத்தியம்பினார்.

பின்னர் பேரா.சோ.சந்திரசேகரன் தனது குறிப்புரையை முன்வைத்தார்.

சமகால அறிவுத் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், ஆசிரியர் கல்வியில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள், எமது ஆசிரியர்களது இன்றைய நிலை, வாண்மைத்துவ விருத்தியில் ஆசிரியர்களது அக்கறை அகவிழியின் முக்கியத்துவம் என பல்வேறு புள்ளிகளில் தனது கருத்துகளை முன்வைத்தார். மேலும் அகவிழி முழுமையாக ஆசிரியர்களை சென்றடையாமைக்கான காரணங்கள் என்ன? அகவிழியின் உள்ளடக்கத்தில் என்ன மாற்றம் வேண்டும்? போன்ற கேள்விகளையும் எழுப்பி கலந்துரையாடலை ஆரம்பித்தார்.





தொடர்ந்து பேராசிரியர் சபா. ஜெயராசாவும் 'கல்வித்தர மேம்பாடு, ஆசிரியர் தர மேம்பாடு வாசிப்பு மேம்பாடு' என பல்வேறு அம்சங்களை சுட்டிக்காட்டினார். அகவிழி மட்டுமல்ல கல்வியியல் சார்ந்த பல்வேறு நூல்கள் கூட இன்று தமிழில் வெளிவருகின்றன. ஆகவே ஆசிரியர் கல்வியில் உயர்ச்சி அடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன. ஆனால் எமது ஆசிரியர்கள் வாசிப்பில் நாட்டமில்லாதவர்களாக இருப்பது வேதனையாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பலரும் கலந்துரையாடலில் ஈடுபட்டார்கள். குறிப்பாக அதிபர் பாலச்சந்திரன் அகவிழியின் சிறப்பை மாத்திரமல்லாமல் மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திக்கான ஏற்பாடுகள் பற்றியும் இனிமேல் ஆய்வு மாணவர்களது கட்டுரைகள் பல அகவிழியில் இடம் பெறுவதற்கான முன்னேற்பாடுகள் உருவாகியுள்ளன என்றும் குறிப்பிட்டார். பேராசிரியர் மா.செல்வராசாவும், அகவிழி மட்டக்களப்பு கல்வி விருத்தியில் காட்டிவரும் அக்கறைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அகவிழியுடன் இணைந்து நாம் செயலாற்ற வேண்டும எனவும் குறிப்பிட்டார்.

கலாநிதி மா.கருணாநிதி மட்டக்களப்புக் கல்விப் பிரச்சினைகள் ஒவ்வொரு இதழிலும் வெளிவந்தால் மட்டக்களப்பு ஆசிரியர்கள் மத்தியில் அதிகம் வரவேற்புக் கிடைக்கும் என்றார். இதைவிட புதிய எழுத்தாளர்களை அறிமுகம் செய்யக் கூடிய சந்தர்ப்பமும் இதனால் கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார்.

கல்வியின் பல்வேறு புதிய போக்குகள் அவற்றை யாவரும் இற்றைப்படுத்த வேண்டிய அவசியம் அகவிழியின் பல் பரிமாணத்தன்மை என பல நிலைகளில் கலந்துரையாடல் இடம் பெற்றது. பொதுவாக கல்வி விழிப்புணர்வுக்கான சாதகமான கருத்தாடல் வெளி உருவானது. சமகாலக் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் இந்த நிகழ்ச்சி வித்தியாயமாகவும் கனதியாகவும் அமைந்திருந்தது. இவை யாவற்றையும் சாத்தியப்படுத்திய பெருமை அகவிழிக்கே சேரும்.

-மூர்-



துரைமடன்

அகமும் புறமும்

பொதுவாக பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் சார்ந்தாகவே பரீட்சை வினாத்தாள் அமைய வேண்டும். இது பொதுவான விதிமுறை.

5ம் தரப் புலமைப் பரீட்சை உளைத்தும் கோலங்கள்

5ம் தரப் புலமைப் பரீட்சை தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் கல்வியாளர்கள் மத்தியில் உண்டு. ஆனால் இந்த விமர்சனங்களை உள்வாங்கி மாற்று நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடக்கூடியவாறு இல்லை. சாதாரணமாக கிராமப்புற வறிய மாணவர்களுக்கு இதனால் நன்மைகள் கிடைக்கும் வாய்ப்புக்-கள் அறவே இல்லாமல் போகிறது.

இத்தகு எல்லா நிலைமைகளும் தெரிந்திருந்தாலும் அதிபர் ஆசிரியர் மட்டங்களில் 5ம் தரப் புலமைப் பரீட்சை தொடர்பாக தெளிவான கண்ணோட்டம் இல்லை. இவர்களே இந்த மாதிரி இருந்தால் பெற்றோர்கள் மத்தியில் நாம் இத்தெளிவை எதிர் பார்க்க முடியாது. தற்போது நகர்ப்புறப் பெற்றோர்களின் அந்தஸ்துடன் தொடர்பான விடயமாக இந்தப் பரீட்சை மாறிவிட்டது. புதுவித பண்பாட்டு அசை-வியக்கத்துக்கும் இது காரணமாக அமைந்துள்ளது. தனியாள் விருத்தி மற்றும் பரீட்சை நோக்கில் விவேகம், நுண்ணறிவு தொடர்பில் பிழையான மதிப்பீடுகள் செல்வாக்குச் செலுத்து-கின்றன. இதனால் வினாத்தாள் உருவாக்கத்தில் பெரும் குழப்பம் நிகழ்ந்துள்ளது.

பொதுவாக பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்ட விட-யங்கள் சார்ந்தாகவே பரீட்சை வினாத்தாள் அமைய வேண்டும். இது பொதுவான விதிமுறை. இதைவிட ஆசிரிய ஆலோசகர்கள் பாடத்திட்டத்துக்குப் புறம்பாக எதனையுமே கற்பிக்கத் தேவையில்லை என்றுதான் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்கள். இதனையே 5ம் தரத்துக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் பின்பற்றுகிறார்கள். மாணவர்களும் இப்பின்-புலத்தில் வைத்துத் தான் தயார்ப்படுத்தப்படுகின்றனர்.

ஆனால் 2008 இல் நடைபெற்ற 5ம் தரப் புலமைப் பரீட்சை வழமையான எதிர்பார்ப்புகள் கற்றல் - கற்பித்தல் செயற்-பாடுகளுக்கு மாறாகவே நடைபெற்றுள்ளது. வினாத்தாள் தயாரிப்பு வேறுவிதமாக அமைந்துள்ளது. வினாத்தாளின் பகுதி- I என்பதே சர்ச்சைக்குரியது. இப்பரீட்சையின் வாயி-லாக மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுவது என்னவென்பது சம்-பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கே விளங்கவில்லை.

வினாத்தாளை தயாரிப்பவர்கள் தமது ஆளுமை, திறன், அறிவு, மனப்பாங்கு சார்ந்து மட்டும் தான் செயற்படுகின்றார்கள். பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளின் பண்பாட்டு அசை-

வியக்கம் இவர்களது சிந்தனையில் பெரும் தாக்கம் செலுத்துவதாகவில்லை.

படித்த நகர்ப்புற பெற்றோர்களின் மன எழுச்சி-களுடன் பண்பாடுகளுடன் நேரடித் தொடர்பு கொண்டு மறைமுக அழுத்தங்கள் இப்பரீட்சைக்கு பின்னே தொழிற்படுகிறது என சிந்திக்க இடமுண்டு. பரீட்சைத் தினைக்களம் சமூக நிலைமைகள் பிர-தேசத் தன்மைகள் போன்ற அம்சங்களை கருத்தில் எடுக்காது செயற்படும் அவலம், அநீதி சர்வசாதாரண-மாக அரங்கேறுகிறது. இந்தப் போக்கு ஆபத்தானது.

இதைவிட பாடசாலை மட்டங்களிலும் பல்வேறு குளறுபடிகள், அதிபர் ஆசிரியர் நடத்தைகளிலும் சிந்தனைகளிலும் பிழையான மதிப்பீடுகள் போன்ற-வை செல்வாக்குச் செலுத்த ஆரம்பிக்கின்றன.

கல்வியியலில் முதுமாணி பட்டம் பெற்ற சில ஆசிரியர்கள் கூட 5ம் வகுப்பு புலமைப் பரீட்சைக்கு தனியார் ரியூசன் வகுப்புக்களை நடத்தி பெரும் வணிகர்களாக உலா வருகின்றார்கள். எந்தவித கூச்ச-மும் இல்லாமல் கல்வியியலில் பட்டம் பெற்றவர்கள் தாமென்று நிமிர்ந்து நிற்கும் பக்குவம் உள்ளவர்கள் இவர்கள்.

இவர்களுக்கு இந்தப் பரீட்சை தொடர்பில் மீளாய்-வுக்குரிய சிந்தனைகள் எதுவும் இல்லை. ஆனால் தம்மை கல்வியியலாளர்கள் என்று கூறிக்கொள்-வார்கள். இவர்கள் படித்த 'கல்வியியல்' இவர்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. ஆனால் கல்வியை வணிகம் செய்யும் தற்துணிவைக் கொடுத்துள்ளது. மாணவர் நிலை நின்று மற்றும் சமூகநிலை நின்று இந்தப் பரீட்சை குறித்து சிந்திக்கும் பண்பை இவர்களிடம் வளர்க்கவில்லை.

கடந்த நவம்பர் இதழில் பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் தான் எழுதிய கட்டுரையில், "தேசிய மட்டத்திலான ஐந்தாம் தரக் கல்வி ஏற்பாட்டினையும் பரீட்சை வினாத்தாள்களையும் அறிகைத் தளத்திலும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. அதனைச் செவ்விதாகச் செய்யத் தவறுமிடத்து இந்நாட்டின் ஆரம்பக் கல்வியின் விளைவாக உள நலப் பாதிப்புக்குள்ளான சிறுவர்-களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லலைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கும்" என எச்சரிக்கை செய்கின்றார். பேராசிரியரது இந்தக் கருத்து அவர் வழிவந்த மாணவர் பலரிடம் பெரும் தாக்கம் செலுத்தவில்லை. அதிபர் ஆசிரியர் பலர் உளநலப் பாதிப்புக்கு உள்ளாகும் மாணவர்களின் எண்ணிக்-கையை மட்டும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பிட்ட ஒரு பாடசாலையின் அதிபர், 5ம் வகுப்பு மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களை தனது பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டு உருவாக்-காமல் வேறொரு பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் உருவாக்கும் வினாத்தாள்களை வாங்கு-



கிறார்கள். அவற்றை மாணவர்களிடம் விற்பனை செய்கிறார்கள். இதனால் பெரும் வணிகம் அங்கே நடைபெறுகிறது. அந்தப் பாடசாலையில் குறிப்பிட்ட வினாத்தாளை உருவாக்க முடியாத ஆசிரியர் குழாம் தான் உள்ளது போலும். என்ன தகுதி? என்ன தரம்? இது குறித்து அதிபர் ஆசிரியர் உள்ளிட்டோர் யோசிக்க வேண்டும்.

தத்தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஒரு கூறாகக் கருதிச் செயற்பட வேண்டிய (ஒரு மாதிரி வினாத்தாள் தயாரிப்பது) விடயத்தை வேறொரு ஆசிரியருக்கு - வணிகருக்கு - கல்வி வியாபாரம் செய்வதற்கான சந்தர்ப்பத்தை அப் பாடசாலையில் ஏற்படுத்திக் கொடுக்கும் அரசியல், அதிகாரம் வெறுக்-கத் தக்கது மட்டுமல்ல, இது ஆபத்தானதும் கூட. சமூக நோக் கூறுகள் முற்றி வருவதற்கான அறிகுறி-களும் கூட.

'கல்வி' என்ற பெயரில் வியாபாரம் வணிகம் செய்யும் போக்கு மிக மோசமானது. குறிப்பாக 5ம் தரப் பிள்ளைகளை வைத்து இந்த சுரண்டல் நடை-பெறுவது ஏற்கத் தக்கதல்ல. எமக்கான கல்வி தரமான கல்வியாக இருப்பதை உறுதிப்படுத்துவது ஒவ்வொரு-வரது கடமை. ஆனால் தமக்குள்ள இந்த கடமை-களில் இருந்து விலகிக் கொண்டு நாம் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது.

இந்த இடத்தில் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரது பெற்றோருடன் கலந்து உரை-யாடியபோது அவர் குறிப்பிட்ட கருத்து இந்த இடத்தில் இணைத்துப் பார்ப்பது மேலும் பொருத்த-மாக இருக்கும். "எனது பிள்ளை தனியார் வகுப்பு-களுக்கு போகின்றார். வீட்டிலும் தாயார் அவரைப் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகிறார். கடந்த கால வினாத்தாள்களை சேகரித்து வீட்டில் வைத்து பிள்ளைக்கு மீட்டல் பயிற்சியை செய்ய நிர்ப்பந்திக்கிறார். இந்நிலையில் பாடசாலையிலும் மாதிரி வினாத்தாள் வாங்க வேண்டுமென நிர்ப்பந்திக்கிறார்கள். இவ்வளவு பணம் தாருங்கள் என்று பிள்ளை கேட்கும் போது நான் கொடுத்துத்தானே ஆக வேண்டும். அப்படி இருந்தும் இதற்கு ஏன் இவ்வளவு பணம் என்றேன்! ரீச்சர் தான்

கட்டாயம் வாங்க வேண்டும் என்று கூறினார். நாமும் ஏன் பிரச்சினையென்று கருதி அந்தக் குறிப்பிட்ட பணத்தைக் கொடுத்துவிட்டேன். எமக்கும் நேரம் இல்லை. பிள்ளைக்கு படிப்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு. அதனால் நானும் அந்த வினாத்தாள்களை வாங்க பணம் கொடுத்துவிட்டேன் என்றார்."

பாடசாலைக்கும் பெற்றோருக்குமான உறவு இவ்வாறு தான் உள்ளது. இவர் போன்ற பெற்றோர்கள் நகர்ப் புறங்களில் வாழ்பவர்கள். இவர்கள் கல்விச் செயற்பாட்டில் பட்டும் படாமல்தான் பங்கு கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமைகளையும் நாம் கருத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. அதே நேரம் இந்த பெற்றோர்கள் தான் இந்த புலமைப் பரீட்சையில் அதீத ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்பதும் உண்மை. இந்த பெற்றோர்களது மன உணர்வுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தான் எமது அதிபர் ஆசிரியர்கள் செயற்படுகின்றார்கள். இந்த போக்கு நியாயமானது அல்ல.

கல்வியியல் படிக்கும் மாணவர்களே, அந்தக் 'கல்வியியல்' நற்பண்புகளை, சமூக உணர்வுகளை எம்மிடையே வளர்க்க வேண்டும். இதுவே சிறந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உந்துதல்களைக் கொடுக்கும்.

இதுவரை 5ம் தரப் புலமைப் பரீட்சை தொடர்பாக கருத்துக்கள் மீள் சிந்தனைகள் இல்லாமல் இருப்பது சரியா? உளப்பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களை நாம் எண்ணிப் பார்க்காமல் செயற்படுவது நியாயமா?

ஆசிரிய மாணவர்களே அதிபர்களே உங்களை நீங்களே மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

* * * * *

பெற்றோர் ஒருவருடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது அவர் தெரிவித்த கருத்து கவனிப்புக்குரியதாக இருந்தது. "எனது பிள்ளையின் எதிர்காலம் குறித்து நான் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் எனது பிள்ளை படிக்கும் பாடசாலையில் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் மீது அளவற்ற அன்பு பாராட்டுகிறார்கள். மாலை நேர வகுப்புகளும் நடத்துகிறார்கள். என்னுடையபிள்ளை ரியூசன் ஒன்றுக்கும் போவதில்லை".

இவ்வாறு அந்தப் பெற்றோர் குறிப்பிட்டது எனக்கு சந்தோசத்தையும் மிகுந்த ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. அந்தப் பாடசாலையின் வளர்ச்சி செயற்பாடு குறித்து மேலும் அக்கறை கொண்டேன்.

இப்பாடசாலை அமெரிக்க மிசனரிமார்களினால் கட்டப்பட்டது. நூற்றாண்டு வரலாற்றைக் கண்டது. தரம் 1முதல் 5 வரை வகுப்புகள் உள்ளன. தற்போது 127 பிள்ளைகள் படிக்கிறார்கள். தரம் 5 இல் 18 பேர் படிக்கிறார்கள். 2003, 2004, 2005, 2006, 2007 வரை சுமார் 12 - 15 வரை மாணவர்கள் கற்று வந்துள்ளார்கள். முறையே 2, 3, 5, 7, 5 என பிள்ளைகள் 5ம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார்கள். இதைவிட அனைத்து மாணவர்களும் தொடர்ந்து படிக்கும் ஆர்வத்தைக் கொண்டுள்ளார்கள். அயல் பாடசாலைகளில் கல்வி கற்கிறார்கள்.

இப்பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் பெரும்பாலும் அன்றாடம் கூலி வேலைக்குச் செல்வோர். ஆனால் பிள்ளைகளது கல்வியில் மிகுந்த நாட்டம் கொண்டவர்கள். இங்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கூட நல்லமுறையில் இயங்குகிறது. தரம் 4, தரம் 5 வரை படிக்கும் மாணவர்களது கல்வியில் பெரும் அக்கறை செலுத்துகிறார்கள்.

இந்தப் பாடசாலையின் அதிபர் இதே பாடசாலைக்கு அருகில் உள்ள கிராமத்தைச் சார்ந்தவர். இரண்டு ஆசிரியர்கள் பாடசாலை அமைந்துள்ள கிராமத்தைச் சார்ந்தவர்கள். பழைய மாணவர்களும் கூட. ஏனைய ஆசிரியர்களும் ஓரளவு பாடசாலைக்கு அருகில் உள்ளவர்கள் தான். இவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கூட்டாக ஆர்வத்துடன் செயற்பட்டு வருகிறார்கள்.

ஐந்தாம் வகுப்புக்கு கற்பிக்கும் ஆசிரியருடன் பேசும் போது, "நான் 5ம் தரப் புலமைப் பரீட்சைக்கு மாணவர்களை தயாரிக்கும் நோக்கில் செயற்படுவதில்லை. மாறாக 5ம் தரம் படிக்கும் மாணவர்களுக்கு படிப்பிக்கின்றேன். இந்த நினைப்பு மட்டும் தான் என்னை இயக்குகிறது. கடந்த ஐந்து வருடங்களாக இந்தப் பாடசாலையில் உள்ளேன். நான் கற்பித்தலை சுமையாகக் கருதவில்லை. எனது வகுப்பில் சுமாரான மாணவர்கள் தான் உள்ளார்கள். இவர்களை கல்வி நாட்டமுள்ளவர்களாக, மகிழ்ச்சியுடன் கற்கும் ஆர்வம் மிகுந்தவர்களாக மாற்றுவது தான் எனது நோக்கம். இதற்கு அதிபர் ஏனைய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் யாவரும் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்" எனத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

5ம் தரப் புலமைப் பரீட்சை பெரும் சுமையாக மாறுகிறதே எனக் கேள்வி எழுப்ப முற்பட்ட போது அவர் குறுக்கிட்டு தெரிவித்த கருத்து முக்கியமாகப் படுகிறது.



நான் சாதாரணமாக படிப்பு வாசனையே இல்லாத குடும்பத்தில் இருந்து வந்தவன். எவ்வளவோ நெருக்கடிக்கு மத்தியில் பலரது உதவிகள் பெற்று படித்தவன். கல்வியின் பயன் என்னவென்பது எனக்கு நன்கு தெரியும். அதை முழுமையாக அனுபவிப்பவன். இதனை யாவரும் பெற வேண்டுமென்று விரும்புபவன். இந்தப் பாடசாலையில் படிக்கும் பெரும்பாலான பிள்ளைகளது பெற்றோர் அன்றாடக் காட்சிகள். இவர்களது பிள்ளைகளுக்கு கல்வி முக்கியம். இதைத் தெளிவாக உணர்ந்து கொண்டு செயற்படுகின்றேன். கல்வியை இன்பமாக அனுபவிக்க சாதகமான சூழல் வேண்டும். '5ம் தரப் புலமைப் பரீட்சை' என்ற போர்வையில் அவசர கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான யதார்த்தம் நடப்பு இங்கு இல்லை. பெற்றோர்கள் இங்கு வந்து எம்மை தொந்தரவு செய்யும் நிலையில் இல்லை. ஆனால் நாளாந்தம் பாடசாலைக்கு வரும் மாணவரது செயற்பாட்டில் மாற்றங்களை அவதானிக்கின்றனர். எம்மீது நம்பிக்கை வைக்கின்றனர். நாமும் அந்த நம்பிக்கைக்கு உரியவர்களாகவே உள்ளோம்.

பிரபல பாடசாலைகளில் நன்கொடை அதிகரிப்பு காணப்படுகிறது. இதனால் எமது பாடசாலையில் முதலாம் தரத்தில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது. கடந்தாண்டு தரம் ஒன்றுக்கு 19 பேர் அனுமதிக்கப்பட்டனர். இந்த ஆண்டு 24 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் மிகக் கெட்டிக்காரர். இடையில் பாடசாலையை விட்டு மாணவர்கள் செல்லாமல் உள்ளனர். இந்தளவிற்கு இந்த ஆசிரியரது பணி உயர்வாக உள்ளது. இதனால் தான் ஏனைய வகுப்புகளிலும் 5ம் தரத்திலும் முழுமையாக கல்விச் செயற்பாட்டை நாம் தொடர முடிகிறது.

பெரும் பாடசாலைகளில் உள்ள அளவீடுகளைக் கொண்டு நமது பாடசாலையை அளவிடாதீர்கள். நாம் பாடசாலைக்குள் மட்டும் இயங்கவில்லை. அந்தச் சமூகத்துக்குள்ளும் இயங்குகின்றோம்.

இங்கு நான்கு மாணவர்கள் மாற்றுவலுக் கொண்டவர்கள். இருவர் 5ம் தரத்தில் உள்ளார்கள். இவர்களுக்கு நாம் விசேடமான கல்விச் செயற்பாட்டை வழங்க வேண்டும். ஆக மொத்தத்தில் எமது பணிகள் பிள்ளைகளுடன் நேரடித் தொடர்பு கொண்டவை. வெறும் பரீட்சை வினாத்தாள் மட்டும் நமக்கான அளவீடாக இருக்க முடியாது. நாம் மாறுபட்டுச் சிந்திக்கும் செயற்படும் சூழலிலும் வாழ்கிறோம். இந்தப் பின்புலங்களையும் புரிந்து கொள்ளுங்கள் நாமும் ஆசிரியர் பணி தான் செய்கிறோம்.

இவ்வாறு மாறுபட்ட தரிசனத்தை எமக்கு உணர்த்தினார் அந்த ஆசிரியர். இத்தகு பாடசாலைகள் இன்றும் எம்மத்தியில் அதிகமாக உள்ளன. '5ம் தரப் புலமைப் பரீட்சை' விவகாரத்தை நாம் யாவருக்கும் ஒரு அளவீடாகப் பொருத்திப் பார்ப்பது வீணான முயற்சியாகவே இருக்கும். எமது இன்றைய நடைமுறை எதார்த்தத்தை நாம் இன்றும் முழுமையாகப் புரிந்து கொள்ளளாமல் இருப்பது சரியா? புரிந்து கொள்வோம். மாற்று ரீதியில் செயற்பாடுகளை முன்னெடுக்க நாம் அர்ப்பணிப்புடன் பணிகளை மேற்கொள்வோம்.

குறிப்பு :- '5ம் தரப் புலமைப் பரீட்சை' தொடர்பில் பொதுவான கருத்துருவாக்கத்தை நிலைப்பாட்டை உருவாக்கத்தை நிலைப்பாட்டை உருவாக்கும் விதத்தில் இந்த விவாதத் தொடரை ஆரம்பித்தோம். ஆனால் எதிர்பார்த்தளவுக்கு பலர் கலந்து கொள்ளவில்லை. தயவு செய்து அன்பர்களே இந்த விவாதத்தல் கலந்து கொள்ளுங்கள்.

-ஆசிரியர்-

நேர்காணல்

கொழும்பு கொச்சிக்கடை புனித அண்ணம்மாள் மகளிர் மகாவித்தியாலய அதிபர் மேரி கமலாவுடன் அப் பாடசாலையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் சமகாலக் கல்வி நிலைமைகள் குறித்து விரிவான கலந்துரையாடல் இடம் பெற்றது. அதிலிருந்து சில பகுதிகளை அகவிழிக்காக தொகுத்துள்ளோம். கஷ்ட/அதிகஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலை அதிபர்களுடனான சந்திப்புக்கள் கலந்துரையாடல்கள் தொடர்ந்து அகவிழியில் இனி எதிர் பார்க்கலாம்.

சந்தித்து உரையாடியர்:
அமிர்தலன்

ஆசிரியர்கள் கற்பித்தலில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்

கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு மாணவ மாணவிகளை மதிப்பீடு செய்யும் வேலைகளும் ஒப்படைக்கப்படுகின்றன. இதனால் ஆசிரியர்களுக்கு வேலை சுமை அதிகரித்துள்ளது. ஆகவே ஒவ்வொரு பிரிவுக்குமாக துணை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது அவசியம் என கொழும்பு கொச்சிக்கடை புனித அண்ணம்மாள் மகளீர் மகாவித்தியாலய அதிபர் அருட் சகோதரி கமலா தெரிவித்துள்ளார்.

அகவிழி இதழுக்காக வழங்கிய நேர்கானல் ஒன்றிலேயே அருட் சகோதரி கமலா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய நேர்கானல் வருமாறு:

உங்கள் பாடசாலை வளர்ச்சிக்கு பிரதேச மக்களின் ஆதரவு உள்ளதா?

ஆம் ஆனாலும் கொச்சிக்கடை பகுதியை பொறுத்த வரை கல்வி தரம் என்பது ஏனை பகுதிகளுடன் ஒப்பிடும் அளவிற்கு குறைவானதுதான். இதனால் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேதான் பாடசாலை வளர்ச்சிக்கான எமது உழைப்பு உள்ளது.

பாடசாலையை சூழவுள்ள சிலர் வேண்டும் என்றே மாணவிகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கின்றனர். எமது பாடசாலைக்குள் வருவதற்கான பாதை பொதுப் பாதையாக இருக்கின்றமையினால் பாட நேரங்களில் அங்கு வரும் சிலர் வகுப்புகளுக்கு முன்னால் உள்ள சுவர் கட்டுகளில் குந்தி இருந்து கதைத்துக்கொண்டிருப்பார்கள்.

பெண்கள் பாடசாலை என்பதனால் தனியான வேறு பாதை ஒன்றை அமைத்து தருமாறு கல்வி திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றேன். இன்னமும் அந்த முயற்சி கைகூடவில்லை.

அவ்வாறு புதிய பாதை ஒன்றை அமைப்பதற்கான எனது நடவடிக்கைக்கு பாடசாலை சூழலில் உள்ள சிலர் முட்டுக்கட்டை போடுகின்றனர். ஆனாலும் கல்விக்கான எனது இந்த முயற்சி எப்போதாவது கை கூடும் என்ற நம்பிக்கை உண்டு.

பாதைப்பிரச்சினை மிகப்பெரிய இடையூறாக உள்ளது. அப்படி இருந்தும் எமது ஆசிரியர்கள் மற்றும் கல்வி சார ஊழியர்கள் மாணவர்களை சிறப்பாக வழி நடத்தி கல்வியில் கவணம் செலுத்த வைக்கின்றனர்.

பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பெற்றோர் உங்களுக்கு ஒத்துடைப்பு வழங்குகின்றனரா?

ஆம் அதுதான் மிகவும் ஆறுதலான விடயம். மேற்படி பிரதேசத்தை சேர்ந்த பிள்ளைகள்தான் கூடுதலாக இங்கு கல்வி பயில்கின்றனர். இருந்தாலும் பெற்றோர் என்ற முறையில் தமது பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு உண்டு.

பெற்றோர்களில் அனேகமானோர் சிறு வியாபாரிகள், கடைகளில் பணிபுரிபவர்கள் வேறு சில பெற்றோர் அன்றாடம் உழைத்து வாழ்பவர்கள் இருந்தாலும் என்னுடன் வந்து பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் குறித்து பேசுவார்கள். பாடசாலைக்கும் தேவையான தம்மாலான உதவிகளை செய்வார்கள்.

குறிப்பிட்ட சில பெற்றோர் மாத்திரமே தங்கள் பிள்ளைகளின் கல்வியின் எதிர்காலத்தை பற்றி அக்கறை கொள்ளாது வேறு விடயங்கள் தொடர்பில் என்னுடன் முரண்படுவார்கள். அது சூழல் பழக்கம் என கருதி பெருதுபடுத்தாது அவர்களின் பிள்ளைகளது கல்வியில் நான் கவணம் செலுத்துவேன். சில பெற்றோர் தமது தவறுகளை உணர்ந்து என்னிடம் வந்து மண்ணிப்பும் கேட்டிருக்கின்றனர்.

எவ்வாறாயினும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தில் எல்லோரும் அங்கம் வகிக்கின்றனர். இப்படியான ஒரு பிரதேசத்தில் இவர்களின் ஆதரவுதான் பாடசாலையின் கணிசமான வளர்ச்சிக்கு துணை நிற்கின்றது.

ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் எப்படி அமைந்துள்ளன?

ஆசிரியர்கள் பல சிரமங்களின் மத்தியில் கல்வி கற்பிக்கின்றர். மாணவர்களின் கல்வி சார்ந்த வேறு வேலைகளும் ஆசிரியர்களுக்கு கல்வி தணைக்களத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக தம்மை தயார்ப்படுத்த வேண்டும். அதற்காக ஏராளமாக வாசிக்க வேண்டும். புதிய விடயங்களை தேட வேண்டும்.

ஆனால அவ்வாறு மேலதிக வேலை ஒப்படைக்-கப்பட்டுள்ளமையினால் இவ்வாறான புதிய விடயங்களை தேடும் நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் ஈடுபட முடியாது. ஆகவேதான் ஆசிரியர்களுக்கான வேலை சுமைகள் குறைக்கப்படுவது அவசியமானது.

இந்த விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவணம் செலுத்த வேண்டும். ஆசிரியர்கள் கற்பித்தலில் மாத்திரமே கவணம் செலுத்துவதற்கு ஏற்ப ஒழுங்கு விதிகள் உருவாக்கப்படுவது நல்லது. எனது

இந்த வேண்டுகோளை அகவிழி ஆசிரியர் சஞ்சிகை மூலமாக விடுக்கின்றேன்.

உங்கள் பாடசாலை மாணவிகள் தனியார் (ரியூசன்) வகுப்புகளுக்கு செல்துண்டா? தனியார் வகுப்புகள் மாணவிகளுக்கு நன்மை பயக்கும் என நீங்கள் கருதுகின்றீர்களா?

இல்லை. பாடசாலை முடிவடைந்த பின்னர் தேவைப்பட்டால் எமது ஆசிரியர்கள் மேலதிக வகுப்புகளை எமது பாடசாலையில் நடத்துகின்றனர். ஆனால் பாடசாலைக்கு வெளியே தனியார் நடத்தும் வகுப்புகளினால் எத்தகைய பயனும் இல்லை. மாறாக அது சீரழிந்த கல்விக் கலாச்சாரம் ஒன்றையே மாணவ மாணவிகளுக்கு கற்றுக் கொடுக்கின்றது.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் சரியாக கற்பித்தால் மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. எமது பாடசாலையை பொறுத்த வரை ஆசிரியர்கள் நன்றாக கற்பிக்கின்றனர். அதனால் தனியார் வகுப்புகளுக்கு எமது மாணவிகள் செல்லவேண்டிய அவசியமில்லை. அத்துடன் அவ்வாறான வகுப்புகளுக்கு செல்லக்கூடாது என்றும் மாணவிகளுக்கு கடுமையான உத்தரவை நான் பிறப்பித்துள்ளேன்.

இது தொடர்பாக பெற்றோருக்கும் அறிவுறுத்தியுள்ளேன். பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பிப்பதற்கும் தனியார் வகுப்புகளில் ஆசிரியர்கள் கற்பிப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. புதிய கல்விச் சீர்திருத்த முறையின்படி தனியார் வகுப்புகளில் கற்பிக்கிறார்களா? இல்லை என்றே நான் சொல்லுவேன்.

பரீட்சையின்போது வினாத்தாள்களுக்கு எவ்வாறு விடையளிப்பது என்பதை மாத்திரம் கருத்தில் கொண்டு தனியார் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆனால் பாடசாலைகளில் அப்படியல்ல.

இதனால் தனியார் வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்வது மிகவும் ஆபத்தானது. தற்போது நடைமுறையில் உள்ள தனியார் வகுப்பு முறைகள் எதிர்காலத்தில் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும் என்பது எனது மற்றுமொரு கோரிக்கையாகும்.

உங்கள் பாடசாலையில் மாணவர்கள் அனுமதியின் போது அரசியல் தலையீடுகளை நீங்கள் எதிர்நோக்கியது உண்டா?

ஆம், அது பெரும் தொல்லை. இருந்தாலும் நான் அவ்வாறான தலையீடுகளுக்கு இடமளிப்பதில்லை. அந்த விடயத்தில் மிகவும் கண்டிப்பாக இருப்பேன். முறைப்படிதான் எனது பாடசாலையில் மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

இந்த விடயத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்கம் எனக்கு ஒத்துமைப்பு வழங்குகின்றது.

ஆனால் எமது பாடசாலை வளர்ச்சிக்காக கல்வி செயற்பாடுகளுக்காக உதவி செய்யும் நலன் விரும்பிகளுக்கு அல்லது அவர்கள் சிபாரிசு செய்யும் மாணவிகளுக்கு எனது படசாலையில் கற்பதற்கு இடமளித்திருக்கின்றேன். அது தவிர்க்க முடியாதது.

அவ்வாறு தவிர்க்க முடியாதது என்று நீங்கள் கூறுவதற்கு வலுவான காரணங்கள் உண்டா?

ஆம் நிச்சயமாக..... எது பாடசாலையை பொறுத்தவரை கல்விசாரா ஊழியர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு கல்வி திணைக்களம் ஊதியம் வழங்குவதில்லை. அவர்களுக்கான ஊதியத்தை வெளியாருடைய நிதி உதவிகளின் மூலமே வழங்குகின்றேன்.

கல்விசார ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டியது கல்வி திணைக்களத்தின் பொறுப்பு. ஆனால் அவர்கள் தங்களிடம் நிதி இல்லை என்று கூறுகின்றனர். கல்விசாரா ஊழியர்கள் இன்றி எப்படி பாடசாலையை நடத்த முடியும்?

எனது அலுவலகத்தில் உதவிக்கு நிற்கும் பெண்பிள்ளைக்கு கூட தனியார் ஒருவரின் உதவியுடன்தான் ஊதியம் வழங்குகின்றேன். இந்த நிலையில் அவர்களின் பிள்ளைகளுக்கு அல்லது அவர்களால் சிபாரிசு செய்யப்படும் மாணவிகளுக்கு எமது பாடசாலையில் கற்பதற்கு இடமளிக்கத்தானே வேண்டும்.

உங்கள் பாடசாலையில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்கின்றதா?

ஆம் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் பரீட்சையில் அனைத்து மாணவர்களும் சித்தியடைகின்றனர். இந்த பாடசாலை அமைந்திருக்கின்ற சூழலைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் கணிசமான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறுவதை இட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்வரும் ஆண்டுகளில் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவார்கள் என நம்புகின்றேன்.



தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி சீர்திருத்தம் ஏற்புடையதாகும் என கருதுகின்றீர்களா?

கல்வி சீர்திருத்தம் மிகவும் அவசியமானது. ஆனால் அந்த சீர்திருத்தத்தின்போது சேர்க்கப்படுகின்ற புதிய விடயங்களுக்கு ஏற்ப பாடசாலைகளில் மாணவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

கொழும்பு நகரிலுள்ள எமது பாடசாலைகளுக்கே வசதிகள் குறைவு என்றால் கிரமப்புற பாடசாலைகளில் எப்படி வசதிகள் இருக்கும்?

எமக்கு வகுப்பறைகள் போதாது, ஆசிரியர் புற்றாக்குறை உண்டு வளப்பற்றாக்குறை உண்டு ஆகவே கல்வி சீர்திருத்தத்தை மேற்கொள்பவர்கள் முதலில் பாடசாலைகளில் உள்ள இவ்வாறான பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அப்போதுதான் கல்வி சீர்திருத்தத்தை நல்ல முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

உதாரணமாக எம்மை போன்ற அனேகமான பாடசாலைகளில் மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்து சென்று கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்த முடியாது ஏனெனில் இடப்பற்றாக்குறை உண்டு வேறு சில பாடசாலைகளில் மைதானம் கூட இல்லை.

ஆகவே புதிய கல்வி சீர்திருத்த முறையின்போது இவ்வாறான பிரச்சினைகளையும் கருத்தில் கொள்ளவது மிக மிக அவசியமானது. வெறுமனே பாடப்புத்தகங்களில் மாத்திரம் புதிய விடயங்களை திருத்தி விட்டு போவது கல்வி சீர்திருத்தம் அல்ல.

அத்துடன் இன்னுமொரு வேண்டுகோள் தமிழ் மொழி மூல பாடநூல்கள் தமிழ் மொழியியேயே எழுதப்பட வேண்டும் மொழி பெயர்ப்பு பாடநூல்கள்தான் தற்போது நடைமுறையில் உள்ளன. அது மாணவர்களின் கல்விக்கு அரோக்கியமானதும் அல்ல.

வாசகர் பக்கம்

தொடர்ந்து அகவிழி வாசித்து வருபவன் நான். தங்கள் 'ஆசிரியர் தலையங்கம்' உண்மையில் கனதியானது மட்டுமல்ல, நுட்பமாகவும் தெளிவாகவும் துணிச்சலுடனும் உள்ளது. தங்கள் கருத்துக்கள் திறனாய்வு நோக்கு இந்தக் காலத்துக்கு தேவையானது. மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

நேரில் நாம் சந்தித்து உரையாட வேண்டும். எனக்குள்ளவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

உங்கள் முயற்சி தொடர வேண்டும். வாழ்த்துக்கள்!

க. பாலேஸ்வரன்
மட்டக்களப்பு

கடந்த இதழில் இடம்பெற்ற 'அகமும் புறமும்' யதார்த்த நிலைமைகளை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. துரை.மடன் சமகால கல்விப் புலத்தை கூர்மையாக அவதானித்து வருகின்றார். இது போன்ற திறனாய்வுப் பக்கம்.. அகவழியில் தொடர்ந்து இடம் பெற வேண்டும்.

இதுவரை கல்விப் புலத்திலிருந்து எழுதுவோர் பெரும்பாலும் கோட்பாடுகளை புதிய சிந்தனைகளை அப்படியே பிரதி பண்ணி வருகிறார்கள். ஆனால் நடைமுறையில் இவற்றை உரைகல்லாகக் கொண்டு பிரயோக எழுத்துக்களை எழுதுகிறார்கள் இல்லை.

அகவிழியில் பிரயோக எழுத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நடைமுறை அலசல்களை திறனாய்வுகளை நாம் ஊக்குவிக்க வேண்டும். வளர்க்க வேண்டும். துரை.மடன் இன்னும் எழுத வேண்டும்.

மா. உதயச்சந்திரன்
மட்டக்களப்பு.

வவுனியா கல்வியியல் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் பலர் தொடர்ந்து அதிகமாக அகவிழியில் எழுதி வருகிறார்கள். ஏனைய கல்வியியல் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர்கள் ஏன் எழுதுவதில்லை.

கற்றல், தேடல், ஆய்வுப் பண்பு போன்ற அம்சங்கள் இல்லாதவர்கள் தான் அதிகமாக கல்வியியல் கல்லூரிகளில் கல்வியியலாளர்களாக வந்துள்ளார்களா? தற்போது வெளிவரும் கல்விசார் கட்டுரைகள், நூல்கள் போன்றவற்றை தொகுத்துப் பார்க்கும் போது பேராசிரியர்கள் சபா. ஜெயராசா சோ. சந்திரகேரன் போன்றோரது முயற்சிகள் தான் அதிகமாக உள்ளன. இவர்கள் இருவரும் தொடர்ச்சியைப் பேணுகிறார்கள். ஆனால் ஏனையவர்கள் மத்தியில் இவர்களுக்குள்ள ஆர்வம் தூண்டல் உழைப்பு ஏன் இல்லை?

முஸ்லிம் கல்வியியலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு உருவாகவில்லையா? அல்லது அகவிழி அவர்கள் மத்தியில் உருவாகும் கட்டுரைகளைப் போடக் கூடாதளவிற்கு இனவாதப் போக்கு உடையதா? ஏனென்றால் அகவிழியில் அதிகம் முஸ்லிம் கல்வியியலாளர்களிடமிருந்து கட்டுரைகள் வெளிவரவில்லை.

இதற்கான விளக்கம் - பதில் ஏதும் இருந்தால் அடுத்த இதழில் எதிர்பார்க்கிறேன்.

எம்.எம்.எம். பௌசர்
குருநாகல்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் குறித்து கவனம் குவிப்பது பொருத்தமானது. தற்போது ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சி இல்லை. மொழி கற்பித்தலில் போதிய பயிற்சியின்றி தவறான அணுகுமுறைகளுடன் கற்பிக்கிறார்கள்.

தரம் 1 முதல் 5 வரை கற்பிக்கும் ஆசிரியர்களது தரம் குறித்து அதிகம் பரிசீலனை செய்யுங்கள். சில பாடசாலைகளில் மாணவர்களது உளப்பண்பை புரிந்து கொள்ளாத ஆசிரியர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு என்னும் பெயரில் சிறைச்சாலைகளைவிட மிக மோசமான வகுப்பறைச் சூழலை பேயி வருகிறார்கள்.

கடந்த இதழில் சபா.ஜெயராசாவும் ந.பார்த்திபனும் எழுதிய இரு கட்டுரைகளும் சிறார்கல்வி பற்றி இன்னும் சிந்திப்பதற்கான பண்புகளைக் கொண்டுள்ளன. இது போன்ற கட்டுரைகள் இன்னும் வரவேற்கப்பட வேண்டும். ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அவசியப்படும் கற்றலில் நுட்பங்கள் தெளிவாக கையளிக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஒவ்வொரு பாடசாலை மட்டங்களில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்பித்தலியல் தொடர்பில் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். அப்பொழுது தான் 'ஆசிரியர் கல்வி' 'ஆசிரியர் தரம்' பற்றிய மீள் நோக்கு சாத்தியமாகும். அகவிழி கவனிக்கப்பட வேண்டிய பகுதி இது.

தி. இளமாறன்
வவுனியா.

பல்வேறுபட்ட கட்டுரைகளை ஒரே இதழல் பார்ப்பது மிகுந்த சந்தோசமாக உள்ளது. ஒவ்வொரு இதழும் திட்டமிட்டு சலிப்பூட்டும் வகையிலன்றி கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

தொடர்ந்து பலர் எழுதினாலும் புதியவர்களும் எழுதத் தொடங்கி உள்ளார்கள். இதன் மூலம் கல்விச் சமூகத்தில் அகவிழி தாக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது எனலாம்.

இருப்பினும் அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகள் அல்லது கருத்துக்கள் ஆசிரியர் கல்வியில் எத்தகு மாற்றங்களை உருவாக்கி உள்ளன? வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் - மாற்றம் என்ன? இதற்கான கணிப்பீட்டை அகவிழி மேற்கொண்டுள்ளதா? என்பதை அறிய ஆவலாக உள்ளேன்.

கொழும்பை மையப்படுத்திப் பார்க்கும் போது பிரபலப் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய ஆலோசகர் கல்வி நிருவாகிகள் மட்டத்தில் அகவிழி இன்னுமே அறியப்பட முடியாமல் உள்ளது.

எனது பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடான சந்திப்பில் அல்லது கல்விசார்ந்த கருத்தரங்குகளில் அகவிழி வாசித்த அருட்டுணர்வு எதுவுமின்றி இருப்பைத அவதானித்துள்ளேன். இதை விட பாடசாலையில் மொத்தம் 73 ஆசிரியர்கள் உள்ளார்கள். இதில் 5 பேர் டிப்ளோமா படிக்கிறார்கள். அந்த வகையில் அகவிழியுடன் ஓரளவு பரிச்சயம் உண்டு. ஏனையவர்களுக்கு அகவிழி படிக்க வேண்டும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எதுவித நிர்ப்பந்தமும் இல்லை.

நான் வேறு மாவட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்று இப்பாடசாலைக்கு வந்துள்ளேன். சுமார் 8 மாதங்கள் கடந்துவிட்டன. இந்தக் குறுகிய காலத்துள் இங்குள்ள கல்விச் சமூகத்தை அவதானிக்கும் பொழுது பாடசாலை என்பது கற்பிக்கப்படும் நிறுவனமாகவே உள்ளது. கற்கும் நிறுவனமாக இன்னும் மாறவில்லை. இந்த மாற்றம் உருவாகும் பட்சத்தில் அகவிழி பெரும் தாக்கம் செலுத்த முடியும்.

கொழும்பைச் சாந்துள்ள தமிழ்ப்பாடசாலைகளில் மற்றும் கல்விச் சூழலில் அகவிழியின் கவனம் திசை திரும்ப வேண்டும்.

அகவிழி ஆசிரியர் பக்கம் கனதியாக வெளிவருகிறது. தங்கள் துணிவு நேர்மை பாராட்டத்தக்கது.

தி. பாலச்சந்திரன்
கொழும்பு

AHAVILI
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) : _____

கற்பிக்கும் பாடசாலை : _____

பாடசாலை முகவரி : _____

தொலைபேசி/தொலைநகல் இல. : _____

மின்அஞ்சல் முகவரி : _____

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : _____

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [ ] இணைத்துள்ளேன்.

_____ _____

கையொப்பம் திகதி

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமர்ஷல் வங்கி, வெள்ளவத்தை
நடைமுறைக் கணக்கு எண் 1100022581

Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

சந்தா விபரம்

தனி இதழ் : 50/=

ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) : 1000/=

அகவிழி விளம்பரக் கட்டணம்

பின் அட்டை	:	7000/-
உள் அட்டை (முன்)	:	6000/-
உள் அட்டை (பின்)	:	5000/-
உள் பக்கம்	:	4000/-
நடு இருபக்கங்கள்	:	6500/-

தொடர்புக்கு

Colombo
3, Torringto Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

Jaffna
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866

Trincomalee
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

Batticaloa
19, Saravana Road, Kallady Batticaloa
Tel: 065-2222814

சேமமடு பதிப்பகத்தின்
புதிய வெளியீடுகள்

பேரா.சபா.ஜெயராசா
ISBN:955-1857-24-0
விலை : 250/-

CBCN:2008-11-25-025



பேரா.சோ.சந்திரசேகரம்
கலாநிதி.மா.கருணாநிதி
ISBN:955-1857-27-1
விலை : 340/-

CBCN:2008-12-28-028

கே.ரீ.கணேசலிங்கம்
ISBN:955-1857-25-7
விலை : 480/-

CBCN:2008-11-26-026



பேரா.சபா.ஜெயராசா
ISBN:955-1857-28-8
விலை : 250/-

CBCN:2008-12-29-029

அ.ஸ்ரீகாந்தலட்சுமி
ISBN:955-1857-26-4
விலை : 750/-

CBCN:2008-11-27-027

எஸ்.அன்டனி நோர்பேட்
ISBN:955-1857-29-5
விலை : 350/-

CBCN:2008-12-30-030

சேமமடு

சேமமடு பொத்தகசாலை
CHEMAMADU BOOK CENTRE

UG.49,50, People's Park, Colombo - 11, Sri Lanka.
Tel : 011-247 2362, 232 1905 Fax: 011-244 8624
E-Mail: chemamadu@yahoo.com

அகவிழி

கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் சென்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

அருணா ஸ்ரோஸ்
38, கம்பளை வீதி,
நாவலப்பிட்டி.
தொ.பே.இல: 077-4728883

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

மகிந்தாஸ் புக் சென்டர்
பதுளை
தொ.பே.இல: 0552230109

அருள் ரேட் சென்டர்
19, பிரதான வீதி,
தலவாக்கல
தொ.பே.இல: 052-2258584

எம்.ஐ.எம். ஷியாட்
46, கோட்ஸ் வீதி,
மாவனெல்ல, 71500
கை.தொ.இல: 0777-065123

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 0777-222366

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
19, சரவணா வீதி, கல்லடி
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-2222500

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 077-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

எம். சண்முகராஜா
56, பதுளுசிறிகம
பதுளை
தொ.பே.இல: 055-2229137/072408521

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0777-840318

எஸ். ஏ. முஹீர்
ஆசிரிய நூலகர்
மர்க்கஸ் வீதி
மூதூர் - 05
தொ.பே. இல: 060 226 1158,
077 991 7758

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

S. ஏகாந்தராஜன்
50/9, றாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

பராசக்தி ஏஜன்சீஸ்
71, பிரதான வீதி
பண்டாரவளை
தொ.பே.இல: 0572223556

M.T.M தௌசீர்
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
0777-411543/071-4493154

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

ஜோதி புக் சென்டர்,
கிரான் பாஜார்,
மன்னார்
தொ.பே.இல: 023- 2222052

அகவிழி நிலையம்
189, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

A.L. அனீஸ் அலி
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567